கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உ௨.] ரக்தாக்ஷி ஹு புரட்டாசிமீ [பகுதி ௧௧.
Vol. XXII. September-October-1924. No. 11.

மாதங்கசூளாமணி.

எடுத்துக்காட்டியல்.

(௩௯௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

IV. விளைவு.

முதற்காட்சி:—நகர்ப்புறத்தேயுள்ள பூஞ்சோலையின் ஒருபக்கத்தில் இராஜகுமாரி, சாலினி, மாலினி, கத்துரு, அபயன் ஆகிய ஐவரும் பரிசனரும் ஒரு வனசரனும் வருகின்றனர்.

இராஜகுமாரி: செங்குத்தான மலைச்சாரலிலே மிக விரைவாகக் குதிரையைச் செலுத்திக்கொண்டு அதோ போகின்றவர் சாவகநாட்டரசரா?

அபயன்: அரசரல்லவென் றெண்ணுகிறேன்.

இராஜகுமாரி: யாராயினும் சரி; இன்று நாம் அரசரிடம் விடைபெற்றுக்கொண்டு வருகிற சனிவாரம் நாகநாட்டுக்குப் போகவேண்டும். (வனசரனைநோக்கி) ஏ வனசரா! பூஞ்சோலையைப் பார்க்கப்போகும் பொழுது குற்றமற்றமிருகமாகிய மானை அம்பினால் எய்துவிழுத்துவதும் மரபாயிற்று; எந்தப் புதர்மறைவிலிருந்து யான் கொலைத்தொழில்புரியவேண்டுமெனக் காட்டுவாய்.

[இவ்வண்ணம் வேட்டையைப்பற்றி இராஜகுமாரி பேசிக்கொண்டிருக்கிற தருணத்தில் இருளப்பன் வருகிறான்.]

இருளப்பன் தான் கொண்டுவந்த கடிதத்தி லொன்றை இராஜகுமாரியின்கையிற்கொடுத்துச் சாலினியென்னும்பெருமாட்டிக்கு வீரன் என்னும் பிரபு எழுதிய கடிதம் இது என்றான். இராஜகுமாரி கடிதத்தை அபயனகையிற் கொடுத்தனள்; காஞ்சனையென மேல்விலாசமிடப்பட்டிருக்கின்றதெனினும் பிரித்துப் படித்தலாற் குற்றமில்லையென நிச்

சயித்து, அபயன் கடிதத்தை அனைவர்க்குங் கேட்கும்படியாகப் படித்தனன். அக்கடிதத்தின் சாரம் வருமாறு:—

முன்னாளில் ஓர் அரசன் இரந்துண்ணும் ஒரு பிச்சைக்காரப்பெண் மேல் இச்சைவைத்தான்; யானும் உன்னை இச்சித்தேன். யான் சிங்கம்; நீ ஆட்டுக்குட்டி; என் காலடிக்கு வந்துவிடுவாயாயின் அன்புகாட்டி விளையாடுவேன்; மறுப்பாயேல் என் கோபத்துக்கிரையாவாய். உன் அன்புக்குழைக்கும்,

"அதிசூரன்."

[அனைவரும் நகைத்து இக்கடிதம் பிறர்க்குரியதென்று சொல்லி இருளப்பனை அனுப்பிவிடுகின்றனர். யாவரும் போனபின் இருளப்பன் தன்னுள்ளே நகைத்து அதிசூரனுக்குத் தான் இடறுகட்டையாயின மையைப்பற்றிச் சந்தோஷித்துக்கொண்டு போகிறான்.]

இரண்டாங்காட்சி:—பூஞ்சோலையின் மற்றொருபக்கத்தில் ஒலிவாணனென்னுமோர் சட்டாம்பிள்ளையும், நாதனென்னும் போதகரும், மட்டியென்னுஞ் சேவகனும் வருகின்றனர்.

[சட்டாம்பிள்ளை தமது கல்வியை விரித்துக்கூறும் தடபுடலான வாசகங்களெல்லாம் நகைக்கிடமாவன; விரிவஞ்சி யவற்றை மொழிபெயர்க்காது விடுகின்றாம். இராஜகுமாரி மானை யெய்து விழுத்தினசெய்தியைப் பொருளாகக்கொண்டு தாம் எழுதிய செய்யுளைச் சட்டாம்பிள்ளை படித்துக்காட்டிக்கொண்டிருக்கிறதருணத்தில் இருளப்பனும் காஞ்சனையும் வருகின்றனர்.]

காஞ்சனை: ஐயா! போதகரே! இந்தக்கடிதத்தைத் தயைசெய்து அடியாளுக்குப் படித்துக்காட்டவேண்டும்.

நாதன்: (காஞ்சனைகொடுத்த நிருபத்தைப் படிக்கிறான்).

அன்புநிலையுளங்கவர ஆணையினைக்கடந்தேன்யான் அன்பாலன்புக்
கின்பமிகுமாணையிட்டேன்எழிலணங்கேநினதுவிழியிரண்டினுள்ளே
மன்பதையோர்தேடுகின்றஞானமுற்றும்யான்கண்டேன்மருட்கைகொண்டேன்
நின்படிவம்புகழ்ந்துரைக்குமாவேநாகினையறியும்நெஞ்சேதஞ்சம்

வேலோன்கைப்படையேபோலிணைவிழிகளென்னைவருத்தும்வெகுளின்மின்னே
மேலோங்குமிடியொலியாய்மென்மொழியுமிடர்விளைக்கும்விழுமியோய்நின்

பாலாயவனப்பனைத்துந்தேவகுருவநத்துரைத்தல்பான்மையாமென்
போலேயோரறிவில்லானுரைப்பதற்குத்துணிந்தமையைப்பொறுப்பாய்நீயே.

ஒலிவாணன்: (பிறர்பாற் குற்றங்காண்பதே தன்னைக் கல்விமானென உலகத்தார்மதிக்கும்படிசெய்வதற்குத் தகுந்தவழி யென்றெண்ணிச் சொல்லுகிறான்.)

அசையைச் சரியா யசைக்கவில்லை; ஆதலால் இசையைத் தவறவிட்டுவிட்டீர். அலகும் அடிக்கணக்கும் தவறில்லாமற்றான் இருக்கின்றன. என்றாலும், இக்காலத்துப்பாட்டும் ஒருபாட்டா? அடியழகும், தொடையழகும் பாவிகமென்னும் மலரின் நறிய வாசனையழகும் வேண்டுமாயின் காளிதாசனையன்றோ கற்கவேண்டும். குரங்காட்டிக்குப் பின்செல்லும் குரங்கைப்போலவும் எஜமானுக்குப் பின்செல்லும் களைத்தகுதிரையைப் போலவும் பண்டைநாட்பெரியோரின் நடையையும் வாக்கியத்தொடையையும் பின்பற்றுவா ரொருசாரார். அவர்கவியும் ஒரு கவியா? அஃதொருபாலாக; ஹே! கன்னிகையே! இப்பத்திரத்தை உனக்கு அனுப்பியவன் யாவன்?

காஞ்சனை: வீரனென்னும் பிரபுவென்று கேள்வியுற்றேன், ஐயா!

ஒலிவாணன்: "வனப்புமிக்க சாலினியென்னுஞ் சீமாட்டியினது கரகமலங்களுக்கு, தாசனாகிய வீரன் எழுதியது."

ஐயா போதகரே! வீரனென்னும் பிரபு அரசருடைய தோழருள் ஒருவர். ஆதலால், இந்த நிருபம் இராஜகாரியமானது; தாமதமின்றி இராஜசமுகத்துக்கு இதனை அனுப்பிவிடுதல்வேண்டும். ஹே! கன்னிகையே! சீக்கிரம் ராஜசமுகத்துக்குப் போ.

(அனைவரும்போகின்றனர்).

மூன்றாங்காட்சி:—பூஞ்சோலையின் மற்றொருபக்கத்தில் வீரன்கையிலொரு பத்திரத்தோடு வந்து தன் காதலைக்குறித்துத் தன்னுள்ளத்தோடு சம்பாஷித்துக்கொண்டுநிற்கிறதருணத்தில், பிரியதத்தமன்னன் ஒரு பத்திரத்தோடு வருவதைக்கண்டு ஒருமரத்தின்மேலேறி மறைந்துகொள்ளுகிறான்.

அரசன்: (தன் கைப்பத்திரத்தைப் படிக்கின்றான்).

அரவிந்தமெல்லிதழினருகணைந்தபனித்துளியையருக்கன்போக்கும்
மரபுன்றன்கண்ணொளியென்றுகம்படிந்தகண்ணீரைமாற்றுங்கண்டாய்

வருமந்திவேலையினிற்கடலெழுந்தமதியமெனவயங்குஞ்சோதி
தருமுன்றன்முகமதியமெனதுகண்ணீராழியினுட்டங்குங்கண்டாய்
புன்கண்ணீர்த்துளியினுள்ளேநின்படிவந்தோற்றுதலாற்பொருவிலாய்நீ
என்கண்ணீர்த்துளியனைத்துந்தோரகவெல்போருக்கேகாநின்றாய்
வன்கண்மைநினதன்றாலென்கண்முன்வந்துநின்றோர்மாற்றஞ்செப்பாய்
மின்கண்ணேவிளங்குகின்றமெல்லிடையாய்நின்னெழிலைவிளம்பற்பாற்றோ.

என்மனத்தை வருத்துகின்ற இன்னலை யான் காதலித்த பெண்ணரசி எங்ஙனம் அறியப்போகின்றாள்; இப்பத்திரத்தை இவ்விடம் போடுகின்றேன்; இனிய தழைகளே என் பேதைமையை மறைப்பீராக. யாரோ வருகின்றார்கள்.

[அரசன் ஒரு செடிமறைவில் அகன்று நிற்கின்றான்]

இலாவணன் தன்கையி லொருபத்திரத்தோடுவந்து மாலினிபால் தனக்குண்டாகிய அடங்காக்காதலை யெடுத்தியம்பித் தானியற்றிய செய்யுளைப் படித்துக்கொண்டிருக்கும் எல்லையிற் சோமகன் ஒரு பத்திரத்தோடு சோலையினுள்ளேவர, இலாவணன் ஒருமரத்தின் பின்னே மறைந்துகொள்ளுகிறான். வீரன் மரத்தின்மேலிருந்து இவரனைவருடைய மனநிலையையும் நோக்கிப் பரிகசித்துக்கொண்டிருக்கிறான். சோமகன் தானியற்றிய காதற்செய்யுளைப் படித்தபின் நெடுமூச்செறிந்து அரசன், வீரன், இலாவணன் ஆகிய தோழர் மூவரும் தன்னைப்போல மன்மதபாணத்துக் கிலக்காகுவாரெனின், தன்பாலெய்திய குற்றம் தனிக்குற்றமாகாதெனச் சொல்லிக்கொண்டு நின்றான்.

இலாவணன்: (மரமறைவிலிருந்து வெளிபேவந்து) ஏது? சோமகா! உனதுகாதல் வரம்புகடந்ததாகவிருக்கிறது. நீ செல்லும்வழியிற் பிறருஞ்செல்லவேண்டுமென்பது நினதுவிருப்பமாயினும் அதனைப் புறத்தே சொல்லுவது தகுதியாகுமா?

அரசன்: (வெளிப்பட்டு) இலாவணா! சோமகன்மேல்மாத்திரம் குற்றமோ? நீ மாலினியைக் காதலித்தெழுதியசெய்யுள் பிறர்செவிக்கும் எட்டிவிட்டதென அறிவாயாக. நான் இச்செடிமறைவிலிருந்து உங்களிருவருடைய முகவேறுபாட்டையும் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தேன். உங்களது நெடுமூச்சும் காதற்செய்யுளும் என்செவியிற்பட்டன. உங்கள்செய்கையை நமது தோழனாகிய வீரன் கேள்வியுற்றால் நகையாடுவானன்றோ?

வீரன்: (மரத்திலிருந்து இறங்கிவந்து) அரசே! அடியேனை மன்னிக்க வேண்டும். நான் இந்த மரத்தின்மீது நெடுநேரமாக விருக்கின்றேன். எனது அரசர் இராஜகுமாரி ஒருத்திமீதுகொண்ட காதலினாற் பட்டபாட்டை நான் என் கண்ணாரக்கண்டேன். 'கண்ணீர்த்துளி தோராகக் காதன்மடந்தை போர்க்குச் சென்றாள்' எனக் கற்பித்துப் பாடியசெய்யுள் என் செவியிற்பட்டது. சோமக லாவணரைக் குற்றஞ்சொல்லுவதா லென்னபயன்?

[என் றிவ்வாறு வார்த்தையாடிக்கொண்டிருக்கிறசமயத்திற் காஞ்சீனையும் இருளப்பனும் வருகின்றார்கள்.]

காஞ்சனை: அரசர்பெருமான் நீடுவாழ்க.

அரசன்: அதென்ன உன்கையிலிருப்பது?

இருளப்பன்: அரசே! அது இராஜத்துரோகம்.

காஞ்சனை: அரசே! இப்பத்திரத்தைப் படித்தருளவேண்டும். அது இராஜத்துரோகம் அடங்கியதெனப் போதககுரு கூறினார்.

அரசன்: இப்பத்திரத்தை உனக்குத் தந்தவன் யாவன்?

காஞ்சனை: இருளப்பன்.

இருளப்பன்: எனக்கு அதிசூரர் தந்தார்.

அரசன்: (பத்திரத்தை வீரன்கையிற்கொடுத்து) வீரா! இதனைப் படிப்பாயாக.

[வீரன் பத்திரத்தைப்பார்த்துவிட்டுக் கிழித்தெறிகிறான்].

அரசன்: ஏதேது? பத்திரத்தை யேன் கிழித்தாய்?

இலாவணன்: அரசே! வீரன் முகத்திற் கோபக்குறிப்பைக் கண்டேன்; ஆதலால், பத்திரத்தை நாம் அனைவரும் பார்க்கவேண்டும்.

சோமகன்: (பத்திரத்தின் துண்டுகளை நிலத்திலிருந்து கையிலெடுத்துக்கொண்டு) அரசே! இப்பத்திரம் நமது தோழனாகிய வீரனுடையகையினால் எழுதப்பட்டிருக்கிறது.

வீரன்: (இருளப்பனை நோக்கி) மூடப்பயலே எனக்கு வெட்கத்தைக் கூட்டிவைக்கவா நீ பிறந்தாய்? (அரசனை நோக்கி) அரசே யான் தவறிழைத்துவிட்டேன். அடியேனை மன்னிக்கவேண்டும்.

[இருளப்பனும் காஞ்சனையும் போய்விடுகின்றனர். நண்பர் கலந்து வார்த்தையாடி வீரன் சாலினிமேற் காதல்கொண்டிருப்பதை அறிந்து கொள்கின்றனர்.]

வீரனுடைய காதலியாகிய சாலினி நிறத்தில் அடுப்புக்கரியைப் போன்றவளெனக்கூறித் தோழர் மூவரும் வீரனைப் பரிகசிக்கின்றனர். வீரன் காதற்சிறப்பைப்பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றான். நாககன்னியருடைய அன்பைப் பெறுவதற்குவேண்டிய சூழ்ச்சிசெய்யவேண்டுமென்று அனைவருங்கூடி ஆலோசிக்கின்றனர். இதனோடு நான்காஞ் சந்தியாகிய விளைவு முடிகின்றது.

V. துய்த்தல்.

முதற்காட்சி:--ஒலிவாணனும், நாதனும், மட்டியும், விட்டினும், இருளப்பனும், அதிசூரனும் ஒன்றுசேர்ந்து வாணசுரநாடகத்தை இராஜசமுகத்திலே நடிக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்கின்றனர்.

இரண்டாங்காட்சி:--இராஜகுமாரி, சாலினி, மாலினி, சுத்துருவாகிய நால்வரும் தமது காதலர் நால்வரைப்பற்றியும் அவரனுப்பிய முத்துமாலை முதலிய கையுறைகளைப்பற்றியுங் கலந்து வார்த்தையாடிக் கொண்டிருக்கும் சமயத்தில் அபயன் உட்புகுந்து அரசனும் தோழரும் ஆயர்வேஷம் அணிந்துகொண்டு இராஜகுமாரியிருக்கும் விடுதியை நோக்கிவருவதாகத் தெரிவிக்கிறான். உடனே நாககன்னியர் நால்வரும் முகமறைய வர்ணந்தீட்டி ஆய்ச்சியர்வேஷம் அணிந்துகொண்டுநின்றனர். அரசனும், தோழரும் யாழோன், குழலோன், தண்ணுமையோன் முதலிய வாத்தியக்காரரும் உட்புகுந்தனர். வந்த ஆயர்நால்வரும் குரவைக் கூத்தாடும்நோக்கமாக ஆய்ச்சியர் நால்வருடையகையையும் பற்றப்போக ஆய்ச்சியர் மறுதலித்துநின்றனர். பலவாறுகப் பரிந்துவேண்டக் குரவையாடுதற்கு உடம்படேமென்ற கன்னியர் ஆயர்வேடத்தோடுவந்த நால்வருக்கும் தமது கையைத்தொட்டு உடனிருந்து வார்த்தையாடுவதற்கு உத்தரவளித்தனர். யாழ் முதலிய வாத்தியங்கள் முழங்கின. முகம் மறைக்கப்பட்டிருந்தமையால் இன்னுளென்றறியாதகாரணத்தினல் அரசன் சாலினியினது கரத்தைப்பற்றி மருங்கிருந்து தனது காதன்மிகுதியை யுரைத்தான். வீரன் இராஜகுமாரியினது கரத்தை

யும், சோமகன் மாலினியதுகாத்தையும், இலாவணன் கத்தரு வினதுகரத்தையும்பற்றித் தமது காதன்மிகுதியைப் பெருகவுரைத் தனர். சிறிதுநேரத்தில் அரசனுந்தோழரும் அகன்றனர். நாககன்னி யர் வேடிக்கையாகத் தங்காதலர் நால்வருடைய காதன்மொழியைப்பற்றி யும் வார்த்தையாடிக்கொண்டிருந்து பின்பு சோலையைவிட்டு விடுதியி னுட்புகுந்தனர். அரசனும் தோழரும் சொந்த உடையணிந்து மீட்டும் சோலையினுள்வர, அவர்வந்து சற்றுநேரத்துக்குள் நாககன்னியர் நால் வரும் சொந்த உடையணிந்து சோலையினுள் வந்தனர். எண்மரும் கலந்து வார்த்தையாடுங்கால், கன்னியர்நால்வரும் தம்பாற் காதலுற்றோ ரைநோக்கி விரதபங்கஞ்செய்வது தகாதசெய்கையெனவும், காதற்கிடங் கொடுத்த நெஞ்சத்தை நிலைநிறுத்தவேண்டுமென்றும் பரிகசித்துக்கூறி வற்புறுத்தினர். இத்தருணத்தில் இருளப்பனும், ஒலிவாணனும், மட்டி யும், விட்டிலும், நாதனும், அதிசூரனும் ஒருவர்பின்னொருவராக வந்து அரசன் முதலிய எண்மருங் கூடியிருக்கின்ற சபையின்முன்னிலையில் வாணாசுரநாடகத்தை நடிக்கவாரம்பித்தனர்.

[இவ்வங்கத்தினுள்ளே பேதைமைபற்றியநகைச்சுவை நிரம்பத்தோற்றும்]

வாணாசுரநாடகம் ஒருபக்கம் நடந்துகொண்டிருக்க, அரசனும் தோழரும் காதல்கைம்மிக்க தமது நிலையையெடுத்துக்கூறிக் கிருபை செய்யவேண்டுமென நாககன்னியரைக் குறையிரந்து வேண்டினர். இத் தருணத்தில் நாகநாட்டிலிருந்து மரகதனென்னும் மந்திரி வந்து நாகநாட் டரசன் இறந்துபோய்விட்டசெய்தியைத் தெரிவித்தான். கன்னியர் அர சனையும் தோழரையும் நோக்கி ஒருவருஷத்தில் மீள்வதாகச்சொல்லிப் போய்விடுகின்றனர். மணந்தார்க்கு இன்பினையளிக்கும் வேனிற்கால வருணனையாகவுந் தணந்தார்க்குத் துன்பினையளிக்குங் கூதிர்க்கால வருணனையாகவும் உள்ள இரண்டுபாடல்களை அரங்கிலுள்ளோர் சிலர் பாடுவதோடு நாடகம் முடிகின்றது. இந்நாடகத்துக்கு ஆக்கியோரிட்ட பெயரை நோாக மொழிபெயர்த்துச் சொல்லுவதாயின் "காதன்முயற்சிக் கிடையீடு" என்று சொல்லலாம். மிகவும் எளிதான ஒரு பொருண்முடி பின்மேல் எழுந்த இந்த நாடகத்தினமைப்பை அவதானித்து அறிந்து கொள்ளுதல் ஏனைய நாடகங்களினமைப்பைக் கிரகித்துக்கொள்ளுவதற் குச் சிறந்த சாதனமாகும்.

இந்நாடகத்தினுள் இகழ்ச்சி, இளமை, பேதைமை, மடன் என்னும் நான்குபொருட்பகுதியும்பற்றிப் பிறந்த நகைச்சுவை தோற்றினமை காண்க. நகைச்சுவைக்கு நேர்விரோதமானது அவலச்சுவை (அழுகை). இது இளிவு, இழவு, அசைவு, வறுமையென்னும் நான்கு பொருட்பகுதியும்பற்றிப் பிறக்கும். மூப்பு, பிணி, வருத்தம், மென்மையென்னும் நான்கும்பற்றித் தோன்றுவது இளிவரற்சுவை. மூப்பு முதலியவற்றாற் றுன்புறுவோன் பிறரால் இகழப்பட்டு எளியனாகியவழி அவனிடத்து அவலந்தோன்றுமாதலால், அவலமும் இளிவரலும் ஒரே நாடகத்தினுட் பொருந்திவருத லியல்பாகும்.

உ. அவலச்சுவை இளிவரற்சுவைக்கு இலக்கியமாக யாம் எடுத்துக்கொண்ட ஆகுலராஜன்சரிதையினதுகதைச்கருக்கம் வருமாறு:—

சிங்கபுரத்துமன்னனாகிய ஆகுலவர்ம்மன் தனதுபுதல்வியராகிய மாணிக்கமாலை, கனகமாலை, குணமாலை யென்னும் மூவரையும் அழைத்து, "மூப்புவந்துற்றமையினால் யான் அரசியற்கடமைகளினின்றும் நீங்கிப் பாறப்போகின்றேன்; இராஜ்யம் இனி நுமக்குரியதாகும்; எனதுபுதல்வியராகிய நும்முள் எவள் என்மீது நிறைந்த அன்பு உடையவளாக இருக்கின்றாளோ அவளுக்கு நிறைந்தபாகத்தைக் கொடுப்பேன்" என்றான். மாணிக்கமாலையும், கனகமாலையும் வயோதிகனாகிய ஆகுலவர்ம்மனுடையசெவிக் கின்பம்பயக்கும் இச்சகமொழிகளையுரைத்துத் தாம் தம் உயிரினும்பார்க்கத் தந்தையை நேசிப்பதாகச் சொன்னார்கள். குணமாலை ஒன்றும்பேசாது மௌனமாயிருந்தாள். அரசன் வற்புறுத்திக்கேட்கக் குணமாலை சொல்லுவாள்; "அரசே! தேவரீர் என்னைப் பெற்று வளர்த்த பிதா. அங்ஙனமாயினும் எனது முழு அன்பும் தேவரீருக்குரியதென்றுசொல்ல அடியாளுக்கு உரிமையில்லை. நான் ஒருநாயகரை அடையப்போகின்றேன்; எனது அன்பிற் சரிபாதி அவருக்கு உரியதாகுமல்லவா? எனதுசகோதரிகள் விவாகம்முடித்தவர்களாயிருந்தும் தங்களது அன்புமுற்றும் தேவரீருக்கு என்றார்களே; தங்கள் நாயகருக்கு மிச்சம்வைத்திருக்கிறார்களோ, அறியேன்!" இவ்வாசகத்தைக்கேட்ட அரசன் சினந்து தனதுநாட்டை இரண்டுகூறு செய்து மாணிக்கமாலையினுடையநாயகனாகிய அரிவர்ம்மன்வசம் ஒரு பாகத்தையும் கனகமாலையின்கணவனாகிய வீரவர்ம்மன்வசம் மற்றொரு

பாகத்தையும் ஒப்புவித்துவிட்டான். இச்சகம்பேசாது உண்மைகூறப் புகுந்த குணமாலைக்கு ஒரு செப்புக்காசுங் கிடைக்கவில்லை இத்தருணத்திற் கௌதமன் என்னும் அமைச்சன் முற்பட்டு அரசனுக்குப் பலவாறாகிய நீதிவாக்கியங்களையும் எடுத்தியம்பிக் "கைப்பொருளைக் கொடுத்துவிடுவது தவறு" எனக் கூறினன். அரசன் சினங்கொண்டு அந் நன்மதியமைச்சனை நாட்டிலிருந்து தூரத்திவிட்டான். சீதனமில்லாத குணமாலையை அவளது குணநலத்துக்காக விரும்பி மணிபுரத்தரசன் மணமுடித்துத் தன்னூர்க்குக் கொண்டுசென்றனன். ஆதுலவர்ம்மன் தனதுபொருளனைத்தையும் புதல்வியர்கையிற் கொடுத்துவிட்டமையினால், மாணிக்கமாலையுடையவீட்டில் ஆறுமாதமும் கனகமாலையுடைய வீட்டில் ஆறுமாதமுமாக ஒவ்வோராண்டினையுங் கழிப்பதற்கு ஏற்பாடு செய்தான். மூத்தபுதல்விவீட்டிற்போயிறங்கிச் சிலநாட்கள் ஆவதற்கு முன் அவள் வயோதிகனாகிய ஆதுலவர்ம்மனைப் பலவாறாக அவமதித்து நடத்தத்தொடங்கினாள். கௌதமனென்னும் அமைச்சன் அரசனைப் பிரிந்திருத்தலாற்றாது மாறுவேடம்பூண்டு ஆதுலவர்ம்மனிடம்வந்து ஒருவேலைக்காரனாக அமர்ந்திருந்தான். மாணிக்கமாலையுடைய தலைமைச் சேவகனாகிய காசிபன் எஜமானியினுடைய கட்டளைப்படி வயோதிக அரசனை அவமதிக்க அதனைப் பொறுக்கமாட்டாது கௌதமன் காசிபனை யுதைத்தான்; மாணிக்கமாலை புறத்தேவந்து தனது தந்தையையிகழ்ந்து வார்த்தையாட அதனைக் கேட்ட ஆதுலன் கைப்பொருளையிழந்த தனது மதியீனத்தை நினைத்து அவலித்துக் கனகமாலையினுடைய வீட்டை நோக்கி நடந்தான். வயோதிகராஜனை அடுத்து ஆதரிக்கவேண்டாமென்பதாக மாணிக்கமாலை தனது சகோதரிக்கு ஒரு நிருபமெழுதி அதனைக் காசிபன்கையிற் கொடுத்து அனுப்பினாள். விரைந்துபோன காசிபனைக் கனகமாலையினது தலைவாயிற்கடையிற் கௌதமன் சந்தித்தான். இருவருக்கு மிடையிற் சில வேறுபாடுகள் நிகழக் கௌதமன் காசிபனை யுதைத்தான். கனகமாலை கௌதமனைத் தனது தந்தையினது சேவகனென்று சிறிதேனும் மதியாது அவனுக்குக் கால்விலங்கிட்டுக் கடைவாயிலில் இருத்தினாள். ஆதுலன் கனகமாலையுடைய வாயிலைக் கிட்டிக் கௌதமன் கால்விலங்கோடிருப்பதைக் கண்டு கோபாவேசங் கொண்டு, அங்ஙனம்செய்தார் யாவரோவென்று விசாரித்துக்கொண்டிருக்கும்போது கனகமாலையும் வீரவர்ம்மனும் வந்துசேர்ந்தனர். கனகமாலை

தந்தையை நோக்கி, "அக்காள்வீட்டிற்குப்போய் இரண்டுவாரந்தான் ஆயிற்றே; இதற்கிடையில் இங்கு வந்துவிட்டீர்; உம்மை உபசரிப்பதற்கு இங்கு ஒரு ஏற்பாடுமில்லை;" என்றிவ்வாறாக வைதுகூறினாள். இத்தருணத்தில் மாணிக்கமாலையும் தங்கைவீட்டுக்கு வந்துவிட்டாள். இருவருமாகத் தந்தையை வைதார்கள். ஆகுலன் மனம்பொறுக்காது நன்றிகெட்ட தனதுபுதல்வியரிருவரையுஞ் சபித்துவிட்டுக் கால்விலங்கு நீக்கப்பட்டுநின்ற கௌதமனோடும் தன்னை யகலாது என்றுமுடன்றிரிகின்ற விதூஷகனோடும் நகர்ப்புறத்தைநோக்கி நடந்தான். குணதரன் என்னும் பிரபு முற்பட்டுப் பலவாறாகிய சமாதானஞ்சொல்லியும் ஆகுலன் கேட்கவில்லை. இந்தக் குணதரனுக்கு இருவர்மக்களுளர். மூத்தவனாகிய மதனன் ஒரு விபசார புத்திரன்; இளையவனாகிய வரதன் சொந்த மனைவி வயிற்றிற் பிறந்தவன். மதனன் வஞ்சனையினாலே வரதனுக்குந் தந்தைக்கும் பகையுண்டாக்கிப் பிரித்துவிட்டுத் தானே அன்புள்ளபுத்திரன் என்று தந்தை நினைக்கும்படியாக நடந்துவருகிறான். வரதன் குற்றவாளியாகச் சாட்டப்பட்டமையால், அவனைப் பிடித்துவரும்படி இராஜகட்டளை பிறந்திருந்தது. மதனன் தந்தைக்குச் சூதுசெய்வான் என்பதை யறிந்த வரதன் பிச்சைக்காரன்போல வேஷம்பூண்டு நகரத் தெருவிலேயே மறைந்து திரிகிறான்.

இவ்வளவோடு முகமும் பிரதிமுகமும் முடிகின்றன. விரிவஞ்சித் தனித்தனி அங்கங்களுக்குச் சாரங்கூறாது அனைத்தினையும் ஒன்றாகத் தொகுத்துக் கூறினாம். இனி, கருப்பம் விளைவு துய்த்தல் ஆகிய மூன்று சந்திகளினுடைய சாரத்தையுந் தருவாம்.

மின்னலும் பேரிடியும் பெருமழையும் நிறைந்த இராப்பொழுதிலே ஆகுலவர்மன் ஒதுங்கிநிற்பதற்கு இடமின்றி, வெட்டவெளியில் அலைகிறான். கௌதமன் ஒரு சிறு குடிசையைக்காட்டி அதனுள் நுழைந்து சற்று ஆறியிருக்கும்படி வேண்ட, "நன்றிகெட்ட புதல்வியருடைய நிந்தைமொழிகளினும்பார்க்க இவ்விடிமுழக்கம் கொடியதோ" என்று சொல்லிக்கொண்டு ஆகுலவர்மன் உட்புகுந்தான். அக்குடிசையினுள்ளே பிச்சைக்காரவேஷம்பூண்ட வரதன் படுத்திருந்தான். அவனைக்கண்ட ஆகுலன், "ஏதப்பா! கந்தைத்துணியுமின்றி இந்தக் குடிசையினுள் இருக்கிறாய்; நீயும் இரண்டுபுதல்வியருக்குக் கைப்பொருளைக்கொடுத்து

விட்டு இக்கதியை அடைந்தனையோ?" என்றான். மனக்கவலையினாலும், வாடைக்காற்றினாலும் அல்லலுற்ற ஆகுலன் தன் சுயபுத்தியிழந்து பைத்தியக்காரனானன். இஃதிவ்வாறிருக்கத் தேசத்துச் சனங்கள் தமது வயோதிக அரசனை மீட்டுஞ் சிங்காசனத்திலேற்றவேண்டுமென்று அதற்காகவேண்டிய சூழ்ச்சி செய்திருந்தார்கள். இதனையறிந்த புதல்வியரிருவரும் தந்தையைக் கொன்றுவிட்டாற்றான் தமக்கு அரசியல் நிலைக்குமென்று நினைத்துத் தமது வஞ்சக்கருத்தை நிறைவேற்றுவதற்கு வழி தேடிக்கொண்டிருந்தார்கள். ஜனங்களுடைய வேண்டுகோளின்படி மணிபுரத்தரசன் சிங்கபுரத்தின்மீது படையெடுத்துச்செல்வதற்கு ஏற்பாடுசெய்திருந்தான். இவற்றையெல்லா மறிந்த குணதரனென்னும் பிரபு அரசனைப் பாதுகாக்கநினைத்துப் புறத்தேபோதற்கெண்ணித் தன் மகன் மதனனைநோக்கி, "வாராய் மதனா! எனது அரசருடையகாரியமாக ஒரு நிருபம் வந்திருக்கிறது. நான் புறத்தே போய்வருகிறேன்; இவ்விஷயத்தை யார்க்குஞ் சொல்லாதே" என்று சொல்லிவிட்டு அப்பெருமழையிலே நகர்ப்புறத்துக்குப் போய்க் கௌதமனைக் கண்டு ஆகுலராஜனை மணிபுரத்தெல்லைக்கு அனுப்பிவைப்பதற்கு ஆகவேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டுவந்தான். வஞ்சகனாகிய மதனன் தந்தை போயினபின்னர்க் குறிப்பிட்ட கடிதத்தைத் தேடியெடுத்துத் தந்தை கொலைக்களத்துக்கு ஆளானாலும் தான் வாழவேண்டுமென்னும் நோக்கத்தோடு கடிதத்தைக் கொண்டுபோய் வீரவர்ம்மன்கையிற் கொடுத்துவிட்டான். குணதரன் திரும்பிவர வீரவர்ம்மனுடைய சேவகர்களுள் ஒருவன் அவனைப் பிடித்துத் தூணோடுகட்டினன். கனகமாலை நெருங்கி வந்து, "மூடா! உன் துரோகச் செயலையெல்லாம் அறிந்துகொண்டோம். வயோதிகராஜன் எங்கே?" என்று வினவினள். ஆகுலராஜன் உயிர் தப்பியிருக்கும்வரையும் தங்களுக்கு இராஜ்யம் நிலையில்லையென்பதையுணர்ந்தாளாதலினால், இந்தவிஷயத்தை மிகுந்த ஆத்திரத்தோடு வினவினள். அரசனை மணிபுரத்துக்கு அனுப்பிவிட்டதாகக் குணதரன் கூறக் கனகமாலை கோபாவேசங்கொண்டு அவனது நரைத்ததாடிமயிரைப் பற்றிப் பிடுங்கியெறிந்தாள். வீரவர்ம்மன் நெருங்கித் "துரோகி உன்கண்ணை மிதிக்கிறேன் பார்" என்று குணதரனுடைய ஒருகண்ணைப் பிடுங்கி நிலத்திற்போட்டு மிதித்தான்; மற்றக்கண்ணையும் பிடுங்குகிற தருணத்தில் அருகில்நின்ற சேவகனொருவன் இக் கொடுஞ்செயலைக் கண்டு மனஞ்

சகிக்காது வாளையுருவி வீரவர்ம்மனைக் குத்தினான். கனகமாலை ஓடோடியும் வந்து அச் சேவகனைக் குத்திக் கொன்றுவிட்டாள். காயப்பட்ட வீரவர்ம்மனை உள்ளே தூக்கிச்சென்றார்கள். இரண்டுகண்ணுமிழந்த குணதரன், "ஐயோ! என்னன்புள்ள மகனே! மதனா! நீ எங்குற்றாய், என்று அழுதான்." கனகமாலை நகைத்து, "ஏடா! மூடா! உன்மகன் மதனன் உள்ளதையுரைத்து உனக்கு இத்தனை கேட்டையும் வரப்பண்ணினான். அவன் உனக்கு இரங்குவானென்று நினைக்கிறாயா?" என்று நடந்தகாரியத்தைக்கூறிச் சேவகரைநோக்கிக் குணதரனை வெளியே பிடித்துத் தள்ளிவிடும்படி கட்டளையிட்டாள்.

[இவ்வளவோடு மூன்றுஞ்சந்தியாகிய கருப்பம் முடிகின்றது.]

கண்ணிரண்டு மிழந்து வழிதடுமாறி அலைவுற்றுவந்த தந்தையை வரதன் சந்தித்துத் தன்னை இன்னானென்றறிவியாது அன்பினோடு தந்தையினுடைய காத்தைப்பற்றி ஆறுதல்வார்த்தைகூறி, மணிபுரத்தினெல்லையை நோக்கி அழைத்துச் சென்றான். இஃதிவ்வாறாக மணிபுரத்துச் சைனியங்கள் சிங்கபுரத்துச் சைனியங்களை யெதிர்த்துக் கடுஞ்சமர்புரிந்தன. சேவகனாற் குத்துண்ட வீரவர்ம்மன் முன்னமே யுயிர்துறந்தானாதலினால், கனகமாலை மதனனையழைத்துத் தனது சேனைக்குச் சேனாபதியாகவும் தனக்கு நாயகனாகவும் இருக்கும்படி வேண்டினாள். தங்கையுடைய சேனைகளுக்கு மதனன் சேனைத்தலைவனாகச் செல்லுகிறான் என்பதைக் கேள்வியுற்ற மாணிக்கமாலை தனது கணவன் அரிவர்ம்மன் உயிரோடிருக்கவும் மதனன்மீது பொருந்தாக் காதல்கொண்டிருந்தாளாதலினால், தங்கையினின்றுபிரித்து மதனனைத் தான் கைப்பற்றவேண்டுமென்றெண்ணி மதனனுக்கு ஒரு நிருபமெழுதிக் காசிபன்கையிற் கொடுத்தனுப்பினாள். காசிபன் வழியிற்செல்லும்போது குணதரனைக் கண்டு அவனைக் கைதியாக்குவதற்கு நெருங்க, வரதன் எதிர்த்துவந்து தன் கைவாளினாற் காசிபனை வெட்டினான். காசிபனுடைய அங்கியினுள்ளிருந்த பொருள்களைச் சோதித்துப்பார்க்கும்போது, மாணிக்கமாலை மதனனுக்கு எழுதிய கடிதம் அகப்பட்டது. அதன் உள்ளுறை வருமாறு:-

"நாம் ஒருவருக்கொருவர் செய்துகொண்ட சத்தியத்தை நினைவுகூருவீராக. நமது பகைவனை முடித்துவிடுவதற்குப் பல வசதிகளேற்

படும்; மனமுண்டானுற் காலமு மிடமும் சௌகரியப்படாமற் போக மாட்டா. அவன் வெற்றிபெற்றுவந்தால் என்பாடு சிறைச்சாலைதான். அவனுடைய சயனமாகிய சிறைச்சாலையிலிருந்து என்னை விடுவித்து உம்முடைய கஷ்டத்துக்குக் கூலியாக உம்முடைய மாற்றானது இடத்தை உமதிடமாக்கிக்கொள்ளும்."

இங்ஙனம்,

உம்மை நாயகனென்றழைக்கவிரும்பிய,

உமது அன்புள்ள அடியாள்

மாணிக்கமாலை.

இந்நிருபத்தை வரதன் கொண்டுசென்று மாணிக்கமாலையின் நாயகனுகிய அரிவர்ம்மன்கையிற் கொடுத்தான். இந்நிகழ்ச்சிக ளிவ்வாருக, மணிபுரத்தெல்லையையடைந்த குணதரன் ஆகுலராஜனைத் தழுவி விதியை நொந்து துன்புற்று அழுகிருன். தீயபுதல்வனுகிய மதனனுடைய சூழ்ச்சியினுற் குணதரன் கண்ணிரண்டு மிழந்தான்; தீயபுதல்வியரிருவருடைய வஞ்சனையினுல் ஆகுலன் அனைத்தையு மிழந்தான். நற்குணசீலையும் மணிபுரத்தரசன்மனைவியும் ஆகுலராஜனது மகளுமாகிய குணமாலை தந்தைக்கு நேர்ந்த இன்னலனைத்தினையுங் கேள்வியுற்று அரமனைவைத்தியனையும் அழைத்துக்கொண்டு விரைந்துவந்து தந்தையைச் சந்திக்கிருள். குணமாலை மனமுருகிக் கண்ணீர்சொரிவதும் தந்தை தன் குற்றத்தை மன்னிக்கும்படி மகளை வேண்டிக்கொள்வதும்' இவற்றைக்கண்ட கௌதமன் முதலினுேர் அவலக்கண்ணீர்சொரிவதும் நான்காஞ்சந்தியாகிய வினையின் ஈற்றுப்பாகங்களாவன.

மதனன் யுத்தத்தில் வெற்றிபெற்றுவருகிருன். சிங்கபுரத்துச் சேனைகள் மணிபுரத்துச்சேனைகளை வென்றமையால், ஆகுலராஜனும் குணமாலையும் புத்தக்கைதிகளாகிச் சிறைச்சாலையி லடைபட்டார்கள்.

மதனன்மேல் அடங்காக்காதல்கொண்ட மாணிக்கமாலை தனது தங்கை கனகமாலையைத்தொலைத்துவிட்டால், மதனன் தனக்காவானென்றெண்ணித் தங்கைக்கு நஞ்சூட்டி விடுகிருள். அரிவர்ம்மன் மதனனையணுகி அவனது வஞ்சச்செயலையுணர்த்தி, "இப்படுபாவியோடு முனைந்து சண்டையிடுவதற்கு இவ்விராஜ்யத்தி லொரு வீரனில்லையோ" என அழைக்க, வரதன் தோற்றி, மதனனேடு வாள்யுத்தஞ்செய்து, தன் கை

இரம்மியன் தன் நண்பரிருவருக்கும் பின்னாக நடந்துசென்றவன் அன்னார்கண்காணாது பண்ணனுடைய திருமனையின் அந்தப்புரத்துப் பூஞ்சோலையைச் சூழ்ந்திருந்த மதிற்சுவரொன்றின்மேலேறிச் சோலையி னுள்ளே குதித்தான். வண்கைமலையனும் மார்த்தாண்டசோழனும் யாண்டுந் தேடிப்பார்த்துவிட்டுத் தம் மனையைநோக்கிப் போயினர். சோலையினுள் மறைந்திருந்த இரம்மியன் சாளரவாயிலிலேதோற்றிய சுசீலையின் முகத்தைக் கண்டு பரவசப்பட்டுநிற்கிறான். அவள் தன்னெஞ் சொடுகூறிய சிலவார்த்தைகள் இவன்செவியிற்பட, சுசீலை தன்மேற் காத லுற்றிருக்கிறாளென்பதை இரம்மியனறிந்து வெளிப்பட்டுத் தன்னை யின்னானென்று தெரிவித்து அவளோடு வார்த்தையாடி மறுநாட்காலை எழுநாழிகைக்குச் செவிலியைத் தன்னிடம் அனுப்பும்படிசொல்லி விடைபெற்றுக்கொண்டு வைகறைப்பொழுதிலே உலோகமாபாலனென் னும் புரோகிதனிடஞ் செல்லுகிறான்; புரோகிதனைக்கண்ட இரம்மியன் தனக்கும் சுசீலைக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் அன்பினைத் தெரி வித்து மறுநாட் பிற்பகல் தனக்குச் சுசீலையை விதிப்படி மணமுடித்து வைக்கும்படியாகப் புரோகிதனை வேண்டுகிறான். புரோகிதன் அதற்கு இசைகிறான். மறுநாள் இரம்மியன் தனது நண்பரிருவரோடும் வார்த்தையாடிக்கொண்டிருக்கும்போது சுசீலையின் செவிலித்தாய் வருகி றாள். நண்பரை யனுப்பிவிட்டு இரம்மியன் செவிலிக்குத் தன்னுடைய எண்ணத்தைத் தெரிவித்துப் பிற்பகலிற் சுசீலையையழைத்துக்கொண்டு உலோகமாபாலனுடையவீட்டுக்கு வரும்படி சொல்லுகிறான். ஆங்குக் காதலிருவஞ் சந்தித்து முறைப்படி மணமுடித்துக்கொள்ளுகிறார்கள். இவ்வளவோடு இரண்டாஞ்சந்தி முடிகிறது.

[செகசிற்பியாரது கவிநயத்தையும் இயன்றவுரை விளக்கிக்காட்டு தல் இன்றியமையாததாதலின், இச்சந்தியினுள்ளேவந்த உவகைச்சுவை நிறைந்த ஒருபாகத்தினது மொழிபெயர்ப்பைத் தருகின்றாம்.]

காலம்: யாமப்பொழுது.   களம்: பூஞ்சோலை.

இரம்மியன்: (நெஞ்சொடு மொழிகின்றான்)

வாட்புண் பட்ட வடுவறி வில்லார்
காட்புண் கண்டு நகைப்பினு நகைப்பர்.
[வேனில்வே ளங்கணை மேவுறா மனத்தர்
சோமனு ரிழைக்குந் துயரினை யறியார்.]

சுசீலை சாளரவாயிலில் தோற்றுகிறாள்.

நெஞ்சே! பொறுபொறு; கீழ்குண திசையில்
அஞ்செஞ் சோதி யலர்கதிர் பரப்பிப்
பேரொளி யொன்றுநன் னீர்மையி னெழுந்தது ;

அதுவே,
ஆரெழிற் பரிதி பேரோ சுசீலை
இகனிறை மதிதரு மின்னலை யொழிக்கப்
பகலவன் வந்த பான்மையை யுணர்ந்தேன்.
வாராய் நிறையெழில் வயங்கிய சுடரே!
நேரா ரியல்பினை னெஞ்சினை வாட்டிய
விண்மதி நின்னெழில் விளக்கங் கண்டு,
தன்னொளி மழுங்கித் தாழ்ந்துநின் றனனால்;

நீயே,
இந்துவை வென்ற சுந்தர வதனச்
செந்திரு வாயினை சிறைசெயுங் கன்னி
மாடத் திருத்தன் மரபோ வுரையாய்?
காதன் மடந்தாய்! ஆ! என் னன்பே!
சிறியே னுளநிறை கழிபெருங் காதலை
அறியாய் ஐயோ! பொறுபொறு மனனே!
அணியெழிற் பாவை மணியிதழ் விரித்து
மொழிசொல முன்னியும் மொழியா தமர்ந்தனள்
வாக்கெழு மாற்றம் வழங்கில ளெனினும்
நோக்கெழு மாற்றம் நோக்கா லுணர்ந்தனன்,
பேதையேற் கன்றம் மாதர்கண் ணோக்கம்
விண்மீ னொளியென மெல்லொளி பரப்பும்
நோக்கிணை மருவின ராக்கமெய் தினரே
செம்மலர் முகத்திற் சேர்ந்தன மெல்விரல்
மெல்விரன் மேலதோர் வியன்பூம் பட்டுடை
பட்டுடை செய்தவம் யான்செய் திலனே,

சுசீலை: ஆ! ஆ! ஐயோ!

இரம்மியன்: மாதோ? அணங்கோ?

அகல்வா னெழுந்து முகிலிடைப் படர்ந்து
கண்டோர் வியக்குங் காமரு காட்சிய

தணங்கே யாத விணங்குமெல் லணங்கே
விண்ணவ ரமிழ்தினை வென்றநி னின்மொழி
உண்ணுதற் கையோ வுருகுமென் னுள்ளம்.

சுசீலை: (இரம்மியன் சோலையுண்ணிற்பதை யறியாது தன் காதலை வெளியிட்டுச் சொல்லுகிருள்.)

இரம்மிய மலையா! இரம்மிய மலையா!
தந்தையை மறந்து தனிப்பெயர் துறந்திங்
கென்பால் வருதி யென்னுள நிறைந்த
காதலை யுணர்ந்தேனைக் கைப்பிடிப் பாயேற்
பண்ணன் மகளெனும் பண்டைத் தொடர்பினை
நீக்கிநின் னுடனுறை வாழ்க்கைமே வுவனே.

இரம்மியன்: (தன்னுள்ளே) இவ்வளவு அமிர்தம் என் செவிவழிநிறைந்தது போதுமோ? அன்றேல் இன்னுந் தாமதித்து நிற்றல் நன்றோ?

சுசீலை: மலையன் என்னும் பெயரன்றோ, எங்கோத்திரத்தாருக்கு வன்கண்விளைக்கின்ற பெயராயிற்று. என்னன்பனே! நீ நின்பெயரல்லை. நீ வேறு; நின்பெயர் வேறு. மலையனென்றாலென்ன? கையா ?காலா? புயமா? முகமா? பிற உடலுறுப்பா? சண்பகமலருக்கு வேறு பெயரிட்டழைத்தாலும் வாசனை வேறாமா? இரம்மியமலையன் என்னும் பெயரை நீக்கிவிட்டு வேறு பெயரிட்டழைத்தால் என்னன்பனுடைய புயவலியும் நிறையெழிலும் அணுவளவேனும் குறைவுபடுமா? என் உள்ளத்துறைவோய்! நீ நின்பெயரை விட்டொழிதி. சொல்லளவாகிய பெயரைநீக்கிவிட்டு அதற்குப்பதிலாக அடியாளை முழுதும் எடுத்துக்கொள்வாயாக.

இரம்மியன்: இன்மொழிநங்காய்! நின் எண்ணம் நிறைவேறுக. ஏழையேனை அன்பனென்று இன்னொருமுறை யழைப்பாயேல் என் பெயரை நீக்கிவிட்டு நீ விரும்பும்பெயரைக் கொள்ளுகிறேன்,

சுசீலை: இந்த நடுநிசியில் என்வாக்குக்கு எதிர்வாக்குரைக்கின்ற ஆடவனாகிய நீ யாரோ?

இரம்மியன்: என்கண்ணே! என்ன பெயரினல் யான் இன்னனென்றென்னை உணர்த்துவனே அறியேன். யான் கொண்டிருக்கும்பெயர்

நின் செவிக்கு அல்லல்விளைக்கும் பகைமைப்பெயர். அது எழுதப்பட்டிருக்குந் தாளைத்தானும் யான் கிழித்தெறிந்துவிடுவேன்.

சுசீலை: நின் இன்மொழிநாவினுரை என்செவியில் இதற்குமுன்னும் பட்டிருக்கிறது. நீ மலேயர்குலத்துதித்த இரம்மியகுமாரனல்லையோ?

இரம்மியன்: அணங்கே! இப்பெயரிரண்டும் நினக்கு இணங்காவாயின், நான் இரம்மியனுமல்லன்; மலேயனுமல்லன் என்பேன்.

சுசீலை: நீ எவ்வாறு இச்சோலையினுள் வந்தனை? மதிற்சுவரோ மிக உயர்ந்துளது; என்னினத்தார் நின்னைக் காணிற் கழிபேரின்னல் விளைப்பார்; காவலைக் கடந்து எங்ஙனம் உட்புகுந்தனை?

இரம்மியன்: காதற்கு வரம்புமுண்டோ? கற்சுவரொருதடையாமோ? காதற்சிறகைக்கொண்டு மதிலைத்தாண்டிப் பறந்துவந்தேன்.

சுசீலை: என் சுற்றத்தார் நின்னைக் காணிற் கொன்றுவிடுவாரென்றஞ்சுகிறேன்.

இரம்மியன்: கோதாய்! நின் இணைவிழிகள் கூற்றத்தையும் வேலையும் ஒத்தன. நின் சுற்றத்தாரது வாட்படையினும்பார்க்க நான் நினது கண்ணாகிய வேற்படையை யஞ்சுகின்றேன்.

[என்றிவ்வாறு இவ் விரு காதலரும் தம் முளநிறையன்பு வெளிப்படுமாறு உரையாடுகின்றனர். இந்நாடகத்தின் முற்பாகம் உவகைச்சுவை ததும்புவது; பிற்பாகம் அவலச்சுவை நிறைந்தது. இனிக் கதைச்சுருக்கத்தைத் தொடர்ந்து சொல்லுவாம்.]

இரம்மியனும் நண்பரும் வீதியிற் போகும்போது வழியிற்கண்ட தீவலமல்லன் வாளையுருவிப் போருக்கழைக்கிறான். தனது நாயகியினது நல்லம்மானென்றெண்ணி இரம்மியன் அவனை எதிர்க்காது பின்வாங்குகிறான். இரம்மியனைத் தீவலமல்லன் தூஷிப்பதைக் கண்ட அவனது நண்பன் மார்த்தாண்டசோழன் மனம்பொறாது வாளையுருவித் தீவலனை யெதிர்க்கிறான். தீவலன் மார்த்தாண்டனைக் கொன்றுவிட அதுகண்டு மனம்பொறாத இரம்மியன் தீவலனையெதிர்த்து அவனைக்கொல்லுகிறான். சோழன் கிள்ளிவளவன் நடந்தகாரியங்களை விசாரித்து, இரம்மியன் உறையூர் எல்லையினுட் புகுதல்கூடாதென்று கட்டளை பிறப்பித்தான்.

இந்நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்ற சுசீலை நல்லம்மா ளிறந்த துய ரொருபுறமும் மணநாளிலே கணவனைப்பிரிந்ததுய ரொருபுறமுமாகத் துன்புறுகிறாள். சுசீலை மணமுடித்துக்கொண்ட செய்தியைச் செவிலித்தாயும் புரோகிதனும் அறிவாரேயன்றிச் சுற்றத்தார் பிறரெவரும் அறிந்திலர்.

இரம்மியன் உறையூரைவிட்டு வெளிச்செல்ல மனமியையாதவனாய் உலோகமாபாலனையணுகிச் செய்வதென்னவென்று விசாரித்தான். இராஜகட்டளையைத் தவறிநடத்தல் சரியல்லவென்றும், ஆமூருக்குப் போய் மறைந்திருந்தால், தான் ஆகவேண்டிய காரியங்களை முடித்துப் பின்பு தெரிவிப்பதாகவும் உலோகமாபாலன் உரைத்தான். இரம்மியன் செவிலியைக் கண்டு அவள் வாயிலாகச் சுசீலையினது துன்பநிலையையுணர்ந்து, சுசீலைக்கு ஆறுதல் உரைத்தபின்பன்றி உறையூரைவிடுதலு வெளியேபோவதில்லையென்று நிச்சயங்கொண்டு இராப்பொழுதாயினபின்னர்க் கயிற்றாலாகிய ஓர் ஏணியைச் சுசீலையினது சாளரத்திலிருந்து தொங்கவிடும்படி செவிலியைக் கேட்டான்; அவளும் அதற்கிசைந்தாள். இரவுவருதலும் இரம்மியன் சுவரைத் தாண்டிச் சோலையினுட்புகுந்து கயிற்றேணிவழியாகச் சாளரத்தினுட்புகுந்து சுசீலையின்சயனசாலையையடைந்தான். அன்றிரவுமுழுவதையும் அவளோடுகழித்துச் சூரியோதயத்துக்குமுன் பிரிவாற்றாது பிரிந்த இரம்மியன் துன்பம்நிறைந்த மனத்தினோடு ஆமூரைநோக்கி நடந்தான். இஃதிவ்வாறாகச் சோழன் கிள்ளிவளவன் தனது நண்பனாகிய பண்ணனையழைத்துத் தனதுதம்பி பாற்கரசோழனுக்கும் பண்ணனதுபுதல்வியாகிய சுசீலைக்கும் மணமுடித்துவைக்கவேண்டுமெனனுங் கருத்துத் தனக்கு நெடுநாளாக உண்டு என்று தெரிவித்தான். பண்ணனும் அம்மணவினைக்கிசைந்து அரசனுடைய விருப்பத்தைத் தனதுமனைவிக்குத் தெரிவிக்க, அவளுஞ் செவிலியைவிளித்துச் சுசீலைக்கு இச்சந்தோஷகரமானசெய்தியைத் தெரிவித்து அவளுடைய விருப்பத்தை யறிந்துகொண்டுவரும்படி யனுப்பினாள். சுசீலை யிவ்விஷயத்தைக் கேள்வியுற்றுச் செய்வதென்னவென்றறியாது தியங்கி உலோகமாபாலனிடம் புத்திகேட்க நிச்சயிக்கிறாள். இவ்வளவோடு மூன்றாஞ்சந்தியாகிய கருப்பம் முடிகின்றது.

பாற்கரசோழன் உலோகமாபாலனுடையமனைக்குவந்து தனக்கும் சுசீலைக்கும் எதிர்த்துவருகிற குருவாரத்தன்று • திருமணம் நடக்கப்

போகின்றதெனச் சொல்லிக்கொண்டிருக்கிறதருணத்திற் புரோகிதன் மனைக்குச் சுசீலையும் வந்தனள். பாற்கரனுக்குஞ் சுசீலைக்கு மிடையிற் சில கூற்றும் மாற்றமும் நிகழுகின்றன். பாற்கரன் போயினபின்னர்ச் சுசீலை தன்னிலையைப் புரோகிதனுக்குரைத்து இனிமேல் நடந்துகொள்ள வேண்டியமுறை யென்னவென்று விசாரித்தாள். அவன் அவள்கையில் ஒரு திராவகத்தைக் கொடுத்து, "அம்மா! நீ நின்வீட்டுக்குப்போய்ப் பாற்கரனை மணமுடிப்பதற்குச் சம்மதித்ததாகச் சொல்லிவிட்டுச் சந்தோஷமாயிரு ; நாளை புதன்கிழமை ; நாளையிரவைக்கு உன் சயன அறையிற் செவிலியோ, பிறரோ இருத்தல் கூடாது ; சயனத்திற் படுத்துக் கொண்டு இப்புட்டியினுள்ளிருக்குந் திராவகத்தைக் குடித்துவிடு; உடனே உன்னுடல் இறந்தாருடலத்தைப்போல அசைவற்று விறைத்துப்போம்; நீ இறந்துவிட்டனையென்றெண்ணி உன்னை ஈமப்புறங்காட்டுக்குக் கொண்டுசென்று தாழியிற்புதைத்துவிடுவார்கள் ; சரியாக நூற்றெட்டுநாழிகைசென்றபின்பு, நீ மீட்டும் உயிர்பெற்றெழுவாய்; அதற்குமுன் இரம்மியன் வந்து உன்னைத் தாழியினின்றெடுத்து ஆமூருக்குக் கொண்டுபோய்விடுவான்" என்றான். சுசீலை மகிழ்ந்து தன்மனைக்குச் சென்று, உலோகமாபாலனுரைத்தவண்ணமே அனைத்தினையுஞ் செய்து முடித்தாள். மறுநாள், பாற்கரசோழனுடைய மணத்துக்குக் குறிக்கப்பட்டதினம். சுசீலையினுடைய சயனஅறைக்குட்சென்று செவிலி பார்த்தபோது மணமகள் சயனத்தின்மேலே யிறந்துகிடப்பதாகக் கண்டாள். நற்றாய், செவிலி, சுற்றத்தார் முதலிய அனைவரும் ஐயோ! முறையோவென் றழுது துன்புறுகின்றனர். இவ்வளவோடு நான்காஞ் சந்தி முடிகின்றது.

உலோகமாபாலன் இரம்மியனுக்கு ஒரு செய்தி யனுப்புகிறான்; அச்செய்தி இரம்மியனுக்குச் சென்றுசேரவில்லை. சுசீலை யிறந்துவிட்டாளென்னுஞ்செய்தி இரம்மியனுக்கு எட்டுகிறது. அவன் துன்புற்று வருந்தி, அவளோடு உடனிறப்பதற்கு நிச்சயித்து, ஔஷதம்விற்போனொருவனிடம்போய்க் கொடியநஞ் சொன்று வாங்கிக்கொண்டு, கையில் ஒரு மண்வெட்டியோடு ஈமப்புறங்காட்டுக்குச் செல்லுகிறான். ஆங்குச் சுசீலையின் உடலம் புதைக்கப்பட்டிருந்த குழியைத் தோண்டித் தாழியைக் கண்டான். அத்தருணத்திற் பாற்கரசோழன் முற்பட்டு

எதிரியாகிய் இரம்மியமலையன், சுசீலையின் உடலத்தை யெடுத்தலைக் கண்டு வாளையுருவிக்கொண்டு சண்டைக்குப்போய் இரம்மியனுடைய கைவாளா லிறக்கின்றான். இரம்மியன் தனது மனைவியாகிய சுசீலை யினுடைய உடலத்தைக் கண்டு ஆறாத்துயர்கொண்டு, அழுது பிரலாபித்துத் தான் கொண்டுவந்த நஞ்சை யுண்டு, கீழேவிழுந்து இறந்து விடுகிறான். உலோகமாபாலன் தானனுப்பிய செய்தி இரம்மியனுக்குச் சென்று சேரவில்லை யென்பதை யறிந்தவுடனே யாதுவிளைந்துவிடுமோ வென்றஞ்சி, விரைந்து ஈமப்புறங்காட்டுக்குச் சென்று பாற்கரசோழனும் இரம்மியனும் உயிர்துறந்துகிடப்பதைக் காணுகிறான். சிசீலை குறிப்பிட்டநேரம்வருமுன்னரே மருந்தினாலாகிய மயக்கந் தெளிந்தெழுந்து உலோகமாபாலனைக் கண்டு, "எங்கே யென்கணவன்" என்கின்றாள். புரோகிதன் பலவாறாகச் சமாதானஞ்சொல்லச் சுசீலை, "என்கண்முன் நில்லாதே, போ" என்று சொல்லிவிட்டுப் பலதிசையும் நோக்கித் தனது நாயகனுடைய உடலத்தைக் கண்டு அவன்முகத்தில் முத்தமிட்டு, அவன்கையில் எஞ்சியிருந்த நஞ்சினையுண்டு, அவனுடைய உடைவாளை உறையினின்று கழற்றி, "இதுவே உனக்கு உரிய உறை" யென்று தனது மார்பினுட் பாய்ச்சி விழுந்து இறக்கின்றாள். பாற்கரனுக்கும் இரம்மியனுக்குஞ் சண்டைநடக்கும்போதே அதனைக் கண்ட காவலாளர் ஓடோடியும்போய் அரசனுக்கும் நகரமாக்களுக்குந் தெரிவித்தனர். அரசன், பண்ணன், மலையன, பரிசனர் முதலினோர் பலரும் ஈமப்புறங்காட்டுக்கு வந்து ஆற்றொணாத்துன்புற்று, உலோகமாபாலன்வாயினால் நடந்த நிகழ்ச்சியனைத்தினையும் அறிகின்றனர். அரசன் பண்ணனையும் மலையனையும்விளித்துப் "பார்த்தீரா நுமது பகைமையா லெய்தியபயனை" எனக் காட்டினான். அன்றுமுதல் அவ்விருவரும் மாறாநட்புப்பூண்டனர். இவ்வளவோடு நாடகம் முடிகின்றது.

[தொடரும்]

விபுலாநந்தர்.

புரூரவசரிதை.

[௩அஅ-ம் பக்கத் தொடர்ச்சி.]

காந்திமதி மாலையிடுபடலம்.

ஏகும்வேலையிலேந்தெழில்வாய்ந்தபூந்
தோகையன்னவச்சுந்தரவல்லியைப்
பாகுசேர்மொழியன்னைபணித்தலால்
வாகைவேற்கணார்மஞ்சனமாட்டியே. (க)

தூசுமாரமுஞ்சுண்ணமும்யோசனை
வீசுசாந்தும்விரைமலர்த்தார்களுங்
காசுநாறுங்கலனுங்கவினிய
மாசிலாதவடிவினிற்சேர்த்தியே. (உ)

மதித்தநான்மறையேடுரைவாய்மையால்
விதித்தமங்கலம்யாவையும்வீரைவா
யுதித்தவான்மணித்தீபமுமொண்கதிர்
பதித்தமூடனம்யாவும்பரப்பியே. (௩)

இந்துவின்கலசத்தமுதென்னவோர்
சந்திரக்கடத்தின்னமுதுந்தனி
முந்துகின்றகருணைமுதலிய
வந்தமாக்கறியாவுமமைத்தரோ. (௪)

பாளிதச்சுருளும்பழுக்காயும்வன்
றுளசைக்கும்விசிறியுஞ்சாந்தமு
மாளியொத்தவருந்திறன்மன்னவன்
றோளசைக்குமோர்தொங்கலும்வைத்தரோ. (௫)

கட்டமைந்தகடியொடுங்காவுமார்
பெட்டகத்தினிற்பெய்வளைதன்னைவைத்
திட்டமுற்றமருகனுக்கீகென
விட்டெடுத்தனள்தாதியர்சென்னிமேல். (௬)

சென்னிதாங்கியேதாதியர்சேறலு
மென்னையாளுடையானெஃதிர்ந்தானிதில்
அன்னமாதியமர்ந்தனவாமென
உன்னியேயெடுத்தானும்பாயினன். (எ)

தன்றனைப்பெறுந்தாய்துயர்தள்ளுவான்
மின்றிளைத்தசிறகால்விசித்தெழுந்
தொன்றுபாதலத்துண்ணமுதத்தினை
யன்றெடுத்ததுவொத்துளனயினன். (அ)

நிறையும்வாரியுநீள்வடகுன்றமுந்
துறையினின்றதுளைமதத்தூங்கலுந்
தறையும்வானும்சரமசரங்களும்
அறையும்வன்சிறைக்காற்றினனுங்கவே. (கூ)

சிறைவிசைக்கொடுசென்றனன்வன்றிறற்
பறவைநாயகனக்கிரிப்பாங்கினி
லறனலாற்றுணையின்றியஞருறும்
பொறைமனத்தவன்முன்னம்பொருக்கென. (க0)

தீயவெம்பசியாலுடல்தேம்பினை
தூயவின்னமுதீந்தனன்றுய்த்தியென்
றுயவன்பொடுமொசொடுஞ்சொல்லிமேற்
போயினனப்புரவலன்போற்றவே. (கக)

அரிந்தமன்பரியத்திறத்தேகலும்
இருந்தசோதியெழின்மணிப்பெட்டகம்
புரிந்துசுற்றுமிலச்சினைபோக்கியே
பரிந்துநோக்கலுங்கண்டனன்பற்றிலான். (கஉ)

வேறு.

உந்துதிரைவாரியினுமும்பருலகத்தும்
தந்தவமுதைப்பழிதாத்தரணிமீதே
கந்தமலரிற்கடவுள்கட்புலன்முதற்பே
ரைந்தினுநிரப்பிடவளித்தவமுதத்தை. (கங)

இவ்வடிவினிவ்வளிதையிவ்வயினிஙெனய்தச்
செய்தவர்கள்யாவர்கொலெனத்தெளியகில்லேன்
பொய்வடிவமோவிணைபுணர்த்திடுதருஞே
மெய்வடிவமோவெனவுமையமுறும்வேலை, (கச)

ஆடகமலர்ப்பதியினன்னமெனவன்ன
வோடரிவிழிச்சிதிகழ்பெட்டியினுளத்தே
தோடலர்மலர்த்தொடைதொடிக்கைகொடுசூட்டித்
தாடொழுதெழுந்திறைதனைத்துயர்தவிர்த்தே. (கரு)

அண்டருலகத்தமுதமாமெனவமைத்த
வுண்டியினைநின்றறுவகைச்சுவையொடூட்டி
வெண்டிரைநுரைக்கலவைதூசணிகண்மேன்மேற்
கொண்டணிசெய்தன்பினொருகொம்பரெனநின்றாள். (கசு)

அன்னபொழுதின்னுலகளந்தவனொடாரு
முன்னவனிருந்தகயிலைக்கிரியின்மூன்னத்
தென்னிடுமிசைப்பெரியயாழ்முனிதெரித்தா
னென்னவினிகழ்ந்தமணமென்னெனநினைந்தே. (கஎ)

மென்றுளபமான்மலரின்மேலவனைமேலோய்
குன்றனையசெக்கடிகிடந்தகுறையோனை
மன்றல்கமழோதிமணமாலையிடுமென்ற
தென்றுபுகலென்றுநகைசெய்தனனிசைத்தான். (கஅ)

மையுறுநிறத்தவன்வழங்குமுரைகேளாச்
செய்யுறுமலர்க்கடவுள்புன்முறுவல்செய்தே
யையுறுவதன்றவனணிப்புயவரைக்கே
பெய்வளைபுனைந்தனள்பெருந்தொடையலென்றான். (கக)

காந்திமதி மாலையிடுபடல முற்றும்.

மூவர்காட்சிப்படலம்.

என்றுநான்முகனியம்பலுங்கமலைசேரிறைவன்
நன்றுநன்றுநாங்காணுதுஞ்சென்றெனநவில
நின்றவானவர்தொழுதெழநிருமலச்சோதிக்
கொன்றைவேணியுமெழுந்தனரதிசயங்குறித்தே. (க)

விடைப்புறத்தினும்விரிசிறைக்கலுழன்வாகுவினுந்
தடத்தினிற்பயிலனத்தினும்வெண்மதாசலத்து
நடைப்பெருந்திறற்கடவுளர்சென்றனர்நவத்
தொடைத்தனிச்சுரர்முனிவரர்முதலினோர்தொடர. (உ)

சென்றுகண்டனர்திரிகர்த்தனுயிர்த்தபூந்தெரிவை
நின்றகோலமுமன்னவனிருக்கின்றநெறியு

மன்றலார்தொடைவேய்ந்தனமுறைமையுமதியா
வொன்றும்விண்டிலர்விதிவழிப்பெருமையையுன்னி. (௩)

மாட்டடைந்திவர்க்குதவுதும்வரமெனமழுவாட்
டோட்டலங்களெட்டுடையவனுரைத்திடச்சுரிவாய்க்
கோட்டலங்கலங்கொண்டலுமறைமுதற்கொழுந்து
மீட்டமுற்றமற்றமாருமிருநிலத்திறுத்தார். (௪)

கூன்றரும்பிறைவேணியுமகரவாய்க்குழையு
மூன்றுகண்களுமான்மழுக்கரமுமைம்முகமுந்
தேன்றருங்குழலுமையொடுமருவிரிசெவ்வான்
றோன்றுமேனியுமாய்நின்றதொருபெருஞ்சோதி. (௫)

வளையுமாழியுமறைகளுங்கருணையுமலர்ந்த
தளைசெய்தாமரைதாங்கிமைம்முகினிறந்தயங்கப்
புளகமாமுலைப்பொறிதிகழ்மருமமும்பொலியத்
துளபமாலையுமாய்நின்றதொருபெருஞ்சுடரே. (௬)

வேதவாசமுமென்மலர்ப்பொகுட்டுமெல்லியலுஞ்
சோதிவாண்முகநான்குமெண்புயங்களுந்துலங்கச்
சீதநீர்ப்பெருங்குண்டிகைமணிவடந்திகழப்
பீதமேனியுமாய்நின்றதொருதழற்பிழம்பே. (௭)

பேதமாகியகுணங்களாற்பேதமொன்றில்லாப்
போதமாகியவொருபொருள்வேற்றுருப்புணர்ந்தே
வேதனாதியமூவராய்முத்தொழில்விரிக்கும்
ஆதிதேவர்தந்தேவரைக்கண்டனனரசன். (௮)

பொய்யிலாமறைப்பொருண்முடிவானமெய்ப்பொருளாந்
தைவராப்பெரும்பொருளொருமுப்பொருடானாய்
வையமேலெளிதாய்வெளிவரக்கண்டமன்னன்
செய்தமாதவப்பெருமையையாவரேதெரிப்பார். (௯)

கண்டமன்னவன்கரதலஞ்சிரதலங்குவிய
விண்டவாய்மொழிகுழறிடவிழிகணீர்வார
வுண்டவன்பினாலுடனடித்திடவந்தவுடையோர்
புண்டரீகமென்பதமிசைதொழுதிவைபுகல்வான். (௧௦)

வேறு.

களியானபேதவழியாறொடாறுகடையொன்றிநின்றகடலிற்
குளியாதபோதமுடையாரெதிர்ந்துகூறுகின்றதன்மையலவே
வொளியாகிநாதவெளியாகிஞானவுருவாய்நிறைந்தபரமே
தெளியாதசிந்தையெளியேனையாளவெளிவந்துநின்றசெயலே. (௧௧)

சுத்தங்கலந்துசகலங்கலந்துதுரியங்கலந்தசொருபத்
தத்தங்கலந்தமுதியோர்கடன்மையறியேனையஞ்சலெனவே
சத்தங்கலந்தபொருளாய்மறப்புநினைவுந்தவிர்ந்ததலையோர்
சித்தங்கலந்ததருவங்கலந்துவெளிவந்துநின்றசெயலே. (கஉ)

மும்மேனியானபொறியொன்றிடாதுபொறியைந்தினூடுமுயல்வுற்
றம்மேனிகழ்ந்தமனனங்கொடாததமியேனையஞ்சலெனவோ
விம்மேனிநாமமிதுவென்பதொன்றுமில்லாதசோதியிடையே
செம்மேனிகொண்டுகருமேனிகொண்டுவெளிவந்துநின்றசெயலே. (கரு)

மயல்கொண்டகாமமுதலானமாயைவலையூடுநின்றுமறுகுந்
துயர்கொண்டுபோதவடிவானதன்னையளியேனெதிர்க்குதொழவோ
வயலொன்றுமின்றியகிலங்கள்யாவுமருளாலியற்றியருளுஞ்
செயலின்றிநின்றதருவங்கலந்துவெளிவந்துநின்றசெயலே. (கச)

ஒருவிக்கலந்தபுவனுதிபூதவுருவாயதற்குளுருவாய்
மருவிக்கலந்தகுணகாரணத்தின்வகையாய்நினைக்கும்வகையோ
கருவிற்கலந்துகரணத்தினின்றுகழியாமல்முத்தியெனுமத்
திருவிற்கலந்துமனமாரவிங்கன்வெளிவந்துநின்றசெயலே. (கடு)

என்னுமொழிந்துபலகால்விழுந்துதொழுவோனைவேலையெறிநீர்
மைந்நாறுகண்டனுமையாளையாதுவரமீதுமென்னமகிழ்வார்
பின்னுமளிப்பதொருபாதமின்னூபிரிவித்தபாதமொடுசெங்
கைந்நாமளித்துமெனவங்குதித்தகரமோடுபாதகமலம். (கசு)

வேறு.

பக்கநின்றவக்கருநிறமணித்திருப்பரமன்
சக்கரப்படையொன்றளித்தனன்புவிதழைப்ப
விக்கணத்தினிவிவ்விடைசெல்கெனிலாங்குப்
புக்குநின்றதோர்விமானமற்றயனருள்புரிந்தான். (கஎ)

வங்கவாரிதிமகிதலத்தியாவரேயெனினுந்
திங்கள்வெண்குடைப்புரூரவாவெனும்பெயர்செப்பிற்
பங்குவானவனனுகுருப்பெருவரம்பகர்ந்தார்
கொங்குவிம்மியகொழுமலர்த்தருநிழற்குழுவோர். (கஅ)

ஆயநல்வரமளித்தவர்பின்னருமவனை
நேயமோடுநீனைத்தவையாவையும்பெற்றுப்
போயமாதொடுமைந்தரைப்பெறுகனப்புகன்று
தூயவெள்ளியங்கிரிமுதற்றெடாவுன்னுதலும். (ககூ)

மூவர்காட்சிப்படல முற்றும்.

இளங்கீரனுர்.

இப் புலவர் புறத்தில் பொருந்தில் இளங்கீரனுர் எனவும் கூறப் படுவர். 'சோழரது உறந்தைப் பெருந்துறை'யினைப் பாராட்டிக்கூறிய வருள் இப் புலவரும் ஒருவர். இவரது குறுந்தொகைச்செய்யுள் (116) நாலடியுடையதாய்ப் பூரிக்கோ [குறுந்தொகைதொகுத்தோர்] என்பவர் சிற்றெல்லை (யாக்) கொண்ட தந்நூல் அளவுக்கு ஓர் காட்டாக இருக் கின்றது.

இவர் கபிலர்காலத்துக்குச் சிறிது பிற்பட்டவர் எனினும் ஆப் புலவர் இயலை மேம்பட உணர்ந்து அவரை, "செறுத்த செய்யுட் செய் செந் நாவின்—வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" என ஏத்தி யுரைப்பர் [புறம்—53].

இவர் சேரநாடு சென்று 'சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறை‖ யின் அளிமைபெற்று அவன் விளங்கில் என்ற நாட்டுக்கு நேர்ந்த இடுக் கணைத் தீர்த்துப் பகைவரைவென்றதை அறிந்து அரசவாகை பாடினர். [புறம். 53] அச்சேரன் சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி யொடு பிறிதோர்முறை போர்தொடுத்தான. அக்காலை சோழன் வெற்றி பெற்ருன். அதற்குக் காரணம் தேர்வண்மலையன் என்ற சிற்றரசன் துணைவலியாகச் சோழன்படையுடன் இணைந்து போர்புரிந்தமையே யாகும். [புறம். 125].

இப்புலவர் மேற்கூறிய சேரன் யுத்தகளத்து வாச்சியம் வாசிப்போர் ஆம்பற்பண்ணெடு பாடுவதைச் சுட்டியுள்ளார். [நற்றி - 113] † கல் லாச்சிறுர் நெல்லிமரநிழலருகே வட்டாடுவது கூறுகின்ருர். நற்றி. 3] †

அகத்தில் இவர் "மகளிர் கணவரைப்பிரிந்தநாளைச் சுவரிற் கோ டிட்டு எண்ணுவர் என்னும வழக்கத்தினைக் குறிப்பதுடன் [அகம்-351] போரந்தை "குத்திப்புதை—சுட்டுக்குவி" என ஒலிக்குமென்றும் உரைப்பர். [அகம்-19]. பாலைத்திணைச்செய்யுட்களே இவர் வாக்கில் பெரிதும் பயில்கின்றன.

இவர் பாடியனவாக அகத்தில் மேற்காட்டியபாடல் [19. 351] இரண்டும் புறத்தில் [53] ஒன்றும் குறுந்தொகையில் [116] ஒன்றும் நற்றிணையுள் [3. 62. 113] மூன்றும் ஆக ஏழுபாடல்கள் கிடைத் துள்ளன.

‖ இம்மாந்தரஞ்சேரல்இரும்பொறையே ஐங்குறுநூறு என்னும் நூலைத் தொகுப்பித்தோன். அந்நூலைத் தொகுத்தோர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்.

† இச்செய்யுட்களை எயினந்தைமகனுர் இளங்கீரனுரொடு இணைத்து உரைப் பர் நற்றிணைப் புத்துரைகாரர்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(கூஅசு-ம் பக்கத் தொடர்ச்சி.)

199. ஊடு பேர்விடம் இன்றி, ஒன் றும் வகை
நீடும் மா கடற் றானை நெருங்கலால்,
ஆடல் மா மத ஆனைச் சனகர் கோன்
நாடெ லாம் ஒரு நன்னகர் ஆயதே!

இ-ள். (ஒரு சேனைக்கும் மற்றொரு சேனைக்கும்) இடையே நிலை பெயரும் இடமில்லாமல் எல்லாச்சேனைகளும்) ஒரே சேனையாம் என்று சொல்லும்) படி, பெரிய கடல்போலும் சேனைகள் நெருங்குதலினால் சனகரது (விதேக) நாடு முழுதும் (அதன் நகர்களுக்கிடையே வெற்றிட மில்லாமற் சனநெருக்கமுற்று) ஒரு நகரம் போன்றது.

ஊடு - ஊடே - இடையே. பேர்வு இடம்- நிலைபெயர்தற்குப்போதிய இடம். ஆடல் - வெற்றி.

[சனகர் முழுஅன்புடன் இழிந்தோர் உயர்ந்தோர் எல்லாருக்கும் உயர்ந்த சம்மானம் செய்தார்: அதற்குமேற் செய்தல் அசாத்தியமாதலால் அவர் அன்பு இழிந்தார்க்கும் இராமருக்கும் ஒத்தது.]

கோலங்காண்படலம்.

சீதாதேவியை அலங்காரம் செய்ததைக் கூறுவது.

(கோலம்—அலங்காரம். காணல்—செய்தல்.

[தசரதர், தேவியரோடு, சிங்காதனத்தில் இருந்தபோது, வசிட்டர் சனகரை நோக்கிச் "சீதாதேவியைத் தருவிக்க" வென, அவர் அயல் நின்ற மாதரை ஏவ, அவர் சென்று தாதியர்பாற் சொல்ல, அவர்கள் சீதாதேவியை அலங்கரிக்கலானார்கள்.]

200. அமிழ்திமைத்துணைகள்கண்ணுக்கணியென அமைக்குமாபோல்
உமிழ்சுடர்க்கலன்கள்நங்கையுருவினைமறைப்பதோரார்

அமிழ்தினைச்சுவைசெய்தென்ன, அழகினுக்கழகுசெய்தார்:
இமிழ்திரைப்பரவைஞாலம்ஏழைமையுடைத்துமாதோ!

இ-ள். (கண்களை மூடி அவற்றின் அழகை மறைக்கும்) இமைகளை (ப் பிரமதேவர்,) கண்களுக்கு அழகென (உடம்புகளைச் சிருட்டிக்குங் காலத்தில்) அமைக்குமாறுபோல, (த் தாதியர்,) ஆபரணங்கள் சீதாபிராட்டியின் திருமேனி (யை மூடி அம் மேனி) அழகை மறைப்பதை அறியாராய், (இன் சுவை அனைத்தும் குறைவின்றி நிரம்பிய) அமிழ்தத்தை (அதிகச் சுவை பெறுத்த முயலலால், அதன்சுவை கெடுமென்றறியாமல், அதிக) ச் சுவையுறச் (செய்ய முயன்று சுவை கெடச்) செய்தாற்போல, (பிராட்டியின் பரிபூரண சௌந்தரியத்தை அதிகப்படுத்த முயலலால் அது கெடுமென்றறியாமல், அவருடைய) அழகுக்கு (அணிகலங்களால் அதிக) அழகு (செய்ய முயன்று அவ் அழகைக் கெடுத்தல்) செய்தார்கள்: (இவ்வாறு செய்த தாதியரும் அவர் செயல் தக்கதென்க் கருதிய மற்ற மக்களும் அடங்கிய) உலகத்... அறியாமையை உடையார்! (இவர் அறியாமை இருந்தவாறு என்னே!).

அமிழ்தல் - ஆழ்தல் - தாழ்தல். அமிழ் இமை - (கண்ணை மூடி அதன் அழகை வெளிப்படாமற் செய்யும்படி) தாழ்கின்ற கண்மடல். துணை - இரண்டு. 'துணைகள்' என்பதிற் 'கள்' அசை (சிந்தாமணி). அணி - அழகு. அமைக்குமாபோல் - அமைக்குமாறுபோல. உமிழ் சுடர்க்கலன் - வீசுகின்ற ஒளியையுடைய ஆபரணம். உரு - உடம்பு; அழகு. சுவைசெய்தல் - சுவையுறச்செய்தல் இமிழ் திரைப் பரவை ஞாலம் - ஒலிக்கின்ற அலைகளையுடைய கடல் (சூழ்ந்த) உலகம். உலகம் உலகத்தாரைக் குறித்தது. ஏழைமை - அறியாமை. உடைத்து - உடையது.

இமை தாழுங்காலத்துக் கண்ணை மூடிக் கண்ணின் அழகு புலப்படாமற் செய்தல் குறிக்கச், சும்மா 'இமை' என்னாது. 'அமிழ் இமை' யென்றார்.

அமிழ்தினும் அதிகச் சுவையுடைய பொருள் யாதேனுமொன்று இருந்தாலன்றோ, அப் பொருளைக்கொண்டு அமிழ்தத்தை அதிகச்சுவையுறச் செய்தல் கூடும்; அப்படிப்பட்ட பொருள் ஒன்றும் இல்லாமையால், அமிழ்தினைச் சுவையூட்ட முயல்வாருளரேல், அவர் அறிவில்

லாரே: அவ்வாறே சீதாதேவியின் அழகுக்குக் குறைந்த அழகுடைய அணிகளைக்கொண்டு அவர் 'அழகினுக்கு அழகு செய்தார்' அறிவில்லாதாரே.

'அழகினுக்கு' என்பதற்கு, 'அழகு வேறு தான் வேறென்றில்லாமல், அழகே தானாக வுள்ள சீதைக்கு' என்றும் பொருள் கொள்ளலாம். இப் பொருளை, இலக்குமி தேவியே சீதாதேவியானா ளென்பதும் 'இலக்குமி' என்ற பதத்துக்கு 'அழகு' என்ற பொருளுண்மையும் வலியுறுத்தும்.

இக் கவி, கழிபேருவகை விளக்கும் கவிகளுள்ளே சிறந்தவற்றுள் ஒன்று. இதனில் எடுத்தாளப்பட்டுள்ள உவமான உவமேயங்கள் ஒன்றுக்கொன்று மிகச் சிறந்த பொருத்த முடையனவாய் நினைக்குந்தோறும் நிரம்ப இன்பம் பயப்பனவா யுள்ளன.

201. கண்ணன் தன்நிறம், தன்உள்ளக்கருத்தினைநிறைத்து, மீதிட்
டுண்ணின்றுங்கொடிகள்ஓடி உலகெங்கும்பரந்ததென்ன,
வண்ணம்செய்கூந்தற்பாரவலயத்து, மழையுட்டோன்றும்
விண்ணின்றமதியின்மென்பூஞ்சிகழிகைக்கோதைவேய்ந்தார்.

இ-ள். இராமபிரானது (கரிய) நிறம், சீதாதேவியின் மனத்தை (இடமாகக்கொண்டு, தன்னால் அதனை) நிறையச் செய்து, (அதனுள் அடங்காமல்) மேலிட்டு, (எழுந்து, வளர்ந்து, எண்ணிறந்த உரோமக்) கொடிகளாக ஓடி எங்கும் பாவியதென்று சொல்லும்படி, (அந்த) நிறத்தை ஒத்த (நிறத்தையுடைய) கூந்தலிலே, மேகத்தில் (இடைவெளியில்) தோன்றும் ஆகாயத்தில் (நிலையாக) நின்ற சந்திரன் போலப், பூமாலையை(த் தாதியர் வட்டமாக)ச் சூட்டினார்கள்.

கண்ணன் - கிருட்டிணன்; அந்த அவதாரமெடுத்த திருமாலின் மற்றோரவதாரமான இராமனைக்குறித்தது. உள்ளக் கருத்து—மனம். உள்ளம் என்பதில் 'அம்' பகுதிப்பொருள் விகுதி. உள்ளமும் கருத்தும் ஒருபொருட் பன்மொழிகள். மிகுந்து பரந்ததென்பது குறிக்க, உலகெங்கும் பரந்த தெனப்பட்டது. செய் உவமச்சொல் (சிந்தாமணி). கூந்தற்பாரம் - அளகபாரம். பாரம் - சுமை. வலயம் - வட்டம். கூந்தற் பாரவலயம், சுமையும் வட்டமுமான கூந்தலென்பதைக் குறித்தது. மழை - மேகம், சிகழிகை - ஒருவகைப் பூமாலை,

'கண்ணன்தன் நிறம்தன் உள்ளக் கருத்தினை நிறைத்து மீதிட் - டுள்நின்றும் கொடிகள் ஓடி உலகெங்கும் பரந்ததென்ன - வண்ணம் செய் கூந்தல்' என்றது பாரதத்தில், அருச்சுன சந்நியாசியின் காவிவேட்டியை "உள்ளடங்கிய காமவெங் கனல்புறத் தோடிக் - கொள்ளை கொண்டன கூறை" என்றது போல்வது காண்க. [கூறை - ஆடை - காவிவஸ்திரம்]

[வில்லை முறித்த வீரர், தாம் காதலித்தவரோ, அல்லரோ வென்ற சந்தேகத்தால் அலைப்புண்ட சீதாதேவியின் மனம் ஊசலாடல் போல அசையும் குழைகளைத் தாதியர்கள் அவர் காதுகளிலே அணிந்தார்கள்.]

202. கோன் அணி சங்கம் வந்து குடியிருந் தனைய கண்டத்
தீனம் இல் கலன்கள் தம்மில் இயைவன அணிதல் செய்தார்:
மான் அணி நோக்கி னார் தம் மங்கலக் கழுத்துக் கெல்லாம்
தான் அணி ஆன போது, தனக் கணி யாது மாதோ?.

இ-ள். திருமால் (கையில்) அணிந்த சங்கு (தேடி) வந்து குடியிருந்தாற் போன்ற (சீதாதேவியின் அழகுடைய) கழுத்திலே (வேலைப் பாடு) குறைபா டில்லாத அணி (வகை) களில் பொருத்தமானவைகளை (த் தாதியர்) அணிந்தார்கள்: (மங்கிலியப்) பெண்கள் கழுத்துக்கெல் லாம் சீதாதேவி (அணிகல அரசாம் தாலி) அணியாயிருக்கும்போது, அவருக்கு அணி (யாகத்தக்கது) யாது ? (ஒன்றுமில்லையென்றபடி)

கோன் - எப்பொருட்கும் இறைவன்; இங்கே விட்டுணுவைக்குறித் தது. ஈனம் - குறைபாடு. ஈனம் இல் அணிகள் - பொற்கொல்லர் தொழிற் றிறமைக் குறைவின்றி அமைத்த ஆபரணங்கள். மான் அணி நோக்கினர் - மான் கண்கள் போலும் கண்களை உடையார். அணி எது கையில் நிற்றல்பற்றிப் போலும் எனப் பொருள் பட்டது. 'அணி' 'அழகு' எனக்கொண்டு, 'மான் கண்ணின் அழகையுடைய கண்ணுடை யார்' என்றும் பொருள்கொள்ளலாம்.

சங்கு, திரண்டு உருண்ட வடிவம், வரிகள், ஓசை இவைகளை உடைத்தாயிருத்தலால், மாதர் கழுத்துக்கு ஒப்பென்பர்.

சீதாதேவி இலக்குமியின் அவதார மாதலாலும், மங்கிலியம் இலக் குமியின் அமிசமாய் இலக்குமியின் பெயராகிய 'திரு'வைத் தனக்கும் பெயராகக் கொண்டிருத்தலாலும் "மானணி நோக்கி னார்தம் மங்கலக் கழுத்துக் கெல்லாம்-தானணி யான போது தனக்கணி யாது மாதோ?" என இயம்புட உரைத்தார்.

[சீதாதேவி தனங்களின்மீது அணிந்த முத்துமாலையை விண்மீன்களைக் கொண்டு கோத்த மாலை யென்னலாமோ? இளம்பிறை யென்னலாமோ? பற்களின் ஒளி பரந்த தென்னலாமோ? யாதென்னலாம்? (விண்மீன் - நட்சத்திரம்)

உண்டென்று ஆத்திகரும் இல்லை யென்று நாத்திகரும் கூறும் பரம் பொருள்போல, 'உண்டு' 'இல்லை' யென்னும்படி உள்ள இடை வருந்தும்படி சீதாதேவிக்குத் தாதியர் அணிகள் அணிந்தார்கள்.

இரண்டு நீலமலர்கள் ஒரு தாமரைமலர்மேல் மலருமானல், அதனில் மூன்றும்நாட்பிறை தோன்றுமானல், அந்தப் பிறை நடுவில் ஒரு விண்மீன் உளதாமானல், அவ் விண்மீனைப்போல, இரண்டு கண்கள் விளங்கும் முகத்தின்மேல் ஒளிரும் நெற்றியிலே, திலகத்தை, மானுட மடந்தையர் நாககன்னியர் தேவமாத ரெல்லாருக்கும் திலகம் போன்ற சீதாதேவிக்குத் தாதியர் தரித்தார்கள்.

சீதாதேவிக்கு அலங்காரஞ் செய்த சேடியர், மலரினது கள்ளுண்டு வண்டுகள் மயங்குதல்போல, அத்தேவியாது அழகுக் கள்ளைக் கண் வாயால் மனவயிறு தேக்கிட உண்டு, ஆசை வெறி கொண்டு, சொற்குழறித், தடுமாற்ற முற்று (அவரைக் கண்ட ஆடவர் படும் பாடு பட்டு) நின்றார்கள்; இஃது ஆச்சரியமன்று: ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் உடல்கள் இருவேறு தன்மையினவே யன்றி, மனங்கள் ஒரேதன்மையினவன்றே?

ஒவ்வொரு பெண்ணிடத்தும் ஒவ்வோரழகு, சிறப்பாக விரும்பத் தக்கதாகக் காணப்படும்; அவ் அழகுகளெல்லாவற்றையும் ஒருசேர ஒரு பெண்ணிடத்துக் கண்டால், அவ்வாறு கண்டதனலாய ஆசையை ஆற்றும் ஆற்றலுடையார் ஆர் உளர்? ஒருவருமில்லை: ஆதலால், மற்றைத் திதிச் சந்திரன்கள்போலன்றி, ஒரு கலைக் குறைவுமில்லாமல் எல்லாக் கலைகளும் பூரணமாக நிரம்பிய பௌர்ணமிச் சந்திரனைப் பார்த்தல் போலப், பிறபெண்கள்போலன்றி, ஓரழகுக் குறைவு மில்லாமல் எல்லா அழகுகளும் சேர நிறைந்த சீதாதேவியை மாதர்கள் பார்த்து அடங்காப் பெருங்களி கொண்டார்கள்.]

203. வல்லியை உயிர்த்த நில மங்கை, 'இவள் பாதம்
மெல்லிய, உறைக்கும்' என அஞ்சி வெளி எங்கும்
பல்லவ மலர்த் தொகை பரப்பின ளெனத், தன்
நல் அணி மணிச் சுடர் தவழ்ந்திட நடந்தாள்.

இ - ள். சீதாதேவியைப் பெற்ற பூமிதேவி, 'இவள் பாதங்கள் மென்மையானவை, (தரையால்) உறுத்தப்படும்' என்று அஞ்சி (ச் சீதாதேவி செல்லும் தரை) வெளியெங்கும் (பலநிறமுடைய) தளிர்கள் மலர்களைப் பரப்பினளென்று சொல்லும்படி, அவருடைய ஆபரணங்களின் (பலவருண்) மணிகளின் (பன்னிற) ஒளிகள் பரவ (அவர், தசரதாதியர் இருந்த மண்டபத்துக்குப்போக,) நடக்கலுற்றார்.

வல்லி—கொடி. கொடி போல்வாள்—சீதை. உறைக்கும்—உறுத்தும்; உறுத்தப்படும் என்று பொருள் கொள்ளநின்றது. பல்லவம்—தளிர். தொகை—கூட்டம்—திரள். தவழ்ந்திட—பரவ.

[தம் நடைக்குத் தோற்று, அன்னங்கள் ஓடிப்போகக்கருதிப் பறந்து எழுந்து பின்பு பயத்தால் ஓடமாட்டாமல் விழுதல்போலச், சாமரைகள் விரிந்து எழும்பித் தாழும்படி இரட்டப்படாநிற்கக், கலாபம் அணிந்த சீதாதேவி கலாப மயில் போலச் சென்றார். (கலாபம்—மாதர் அரையில் அணியும் பதினாறுமணிக்கோவை; மயிற்றோகை.)

மண்ணுலகத்தும் மற்றைய உலகங்களினும் உள்ள மாதர்களுக்கெல்லாம் கண்மணியென்று சொல்லத்தக்க சிறந்த அழகுடைய சீதாபிராட்டியைப் பார்க்க ஆசைகொண்டு இராமபிரானது குலமுதல்வனை சூரியன் விண்ணினின் றிறங்கினாற்போன்றவொளிமிகுந்தவிதான நிழலின் கீழாகச் சென்று சீதாதேவி, தசரதாதி அரசர் கூடியிருந்த மண்டபத்தை அடைந்தார்.

சிருட்டிகர்த்தாவாற் செய்யப்பட்ட பிற மாதருக்குக் கிரந்தகர்த்தாக்களாற் செய்யப்பட்ட பிற கிரந்தங்கள் சமானமாகத், தம்மைச் சிருட்டிப்பாரின்றிச் சுயம்புவாகப் பூமியி னுள்ளிருந்து புறப்பட்டுத் தோன்றிய சீதாபிராட்டிக்குச் 'செய்யா மொழி' யாய்ச் சுயம்புவான வேதமே சமானமாகச் சொல்லலாம்.

அப்படிப்பட்ட சீதாதேவி வந்துசேர்ந்த மண்டபத்திலே, அவர் திருமேனியின் சௌந்தரியத்தைக் கண்ட ஆடவர் பெண்டிரனைவரும், அந்தக் காட்சி யானந்தத்தில் ஆழ்ந்து, அம் மண்டபத்தில் எழுதப்பட்டிருந்த சித்திரப் பாவைகள் போல, இமைகொட்டாமலும் மூச்சுவிடாமலும் இருந்தனர்.]

204. அன்னவளை, அல்லளென, ஆமென, அயிர்ப்பான்,
கன்னி அமிர் தத்தை எதிர் கண்ட கடல் வண்ணன்,
உன் உயிர் நிலைப்பதொர் அருத்தியொ டுழைத்தாண்
டின் அமிர் தெழக் களி கொள் இந்திரனை ஒத்தான்.

இ - ள். அப்படிப்பட்ட சீதாபிராட்டியை (அவர் மண்டபத்துக்கு வருமுன், தாம் கன்னிமாடத்திற் கண்டு காதலித்தவள்) அல்லளென்றும் (காதலித்தவள்) ஆமென்றும் ஐயப்பட்டுக்கொண்டிருந்த இராமர், கன்னி (யர் சமூகமான பாற்கடலிலே தோன்றிய) அமிர்தமான அவரை எதிரே காணப் பெற்றவர் (ஆனபோது), உயிர் (இறந்துவிடாது) நிலைக்கச்செய்ய வேண்டுமென்ற ஆசையாற் (பாற்கடலை வருந்திக் கடைந்து) உழைத்து, அந்தப் பாற்கடலிலே அமுதம் உண்டாகக் (கண்டு) களிப்படைந்த இந்திரனை ஒத்தார்.

அயிர்த்தல் - சந்தேகித்தல். உன்னுதல் - கருதுதல். உன்உயிர் - (அருமையான பொருள்கள் யாவற்றினும் அருமையானதாகக்) கருதப்பட்ட உயிர். நிலைப்பது என்ற தன்வினை நிலைப்பிப்பது என்ற பிறவினைப் பொருள்தந்து நின்றது. ஓர் - ஒப்பற்ற அருத்தி-விருப்பம். உழைத்து-வருந்திவேலைசெய்து. ஆண்டு - அவ்விடத்தில்; முன்பின் தொடர்ச்சியாற் பாற்கடலை உணர்த்தியது.

இந்திரன் அமிர்தம் பெற்று உயிர் நிலைக்கப்பெற்றான்; அவ்வாறே இராமர் சீதாதேவியைப் பெற்று உயிர்நிலைப்புற்றாரென்பது கருத்து.

[மேற்கூறியவாறு சீதாதேவி எதிரே வரக் கண்ட இராமர், 'கன்னி மாடத்தை விட்டு என் அகத்துள்ளே குடி புகுந்திருக்கின்றவள் என் அகத்தேயன்றிப் புறத்தேயும் உள்ளாளோ' என்று எண்ணினர்.

'நாம் செய்த தவத்தால் திருமால் இராமராகவந்தார்; ஆதலால் இலக்குமியே சீதாபிராட்டியானார்' என்று வசிட்டர் எண்ணி மகிழ்வுற்றார்.

'நான் எத்தனையோ காலம் உலகமுழுதும் அரசாளும் செல்வத்தை அடைந்திருந்தேனென்றாலும், அச் செல்வத்தின் அதிதேவதையாகிய) இலக்குமியை என் மருமகளாகப் பெற்றதனால், இன்றுதான் அடைந்தேன்' என்று தசரதர் எண்ணினார்.

தாம் குடியிருந்த தாமரைக் கோயிலை வெறுத்துச் சனக மன்னரது கோயிலிற் குடிபுகுந்த சீதாதேவி, முனிவரைத் தொழுது, பின்பு தசரதரைத் தொழுது சனகருக்கு அருகே யிடப்பட்டிருந்த ஆசனத்திலே அமர்ந்தார். (கோயில் - தேவாலயம்; இராசமனை.)]

205. அச்செ(ன) நினைத்த முதல் அந்தணன் நினைந்தான்,
பச்சை மலை ஒத்த படி வத்தடல் இராமன்,
நச்சுடை வடிக் கண் மலர் நங்கை இவ ளென்றால்,
இச் சிலை கிடக்க, மலை ஏழையும் இறானோ!

இ - ள். (ஆதனத்தில் அமர்ந்த சீதாதேவியை அழகிற் சிறந்த மாதரனைவருக்கும்) அச்சுப் போல்வாரென் றெண்ணிய விசுவாமித்திரர் (ஒன்று) நினைந்தார்: (அது யாதெனில், வில்லை வளைப்பதற்குப் பரிசாகவுள்ள) இவர் இலக்குமிதேவியென்று தெரிந்திருந்தால், இராமர், இந்தவில் (ஒன்றை மட்டுமோ ஒடித்திருப்பார்! இது - சிவன் வில்லாகிய மேருமலை - ஒன்று) கிடக்கட்டும், (சத்த குல பருவதங்களென்ற) மலைகள் ஏழையுமே ஒடியாது விட்டிருப்பாரோ! (என்பது.)

அச்சு - உயிர்; மூலரூபம்; ஆதாரம் (சங்க அகராதி). அச்செ(ன) - (மற்ற அழகிற் சிறந்த மாதர், உடல்போல, அவ் வுடலுக்கு) உயிர் போல்வாளென்று; (எந்த மூல ரூபத்தினின்று மற்றெல்லா அழகிய மாதருடைய ரூபங்களும் பெறப்பட்டனவோ அந்த) மூல ரூப மானவளென்று; பிறமாதருடைய அழகுக்கெல்லாம்) ஆதாரமான (அழகுடையவ) ளென்று: கம்பர்காலத்து அச்சியந்திரம் இருந்திருந்தால், 'அச்செ(ன)' என்பதற்குப் 'பிறமாதரெல்லாம் கையெழுத்துப் போல, இவள் அச்செழுத்துப் போன்றாளென்று' என்றும் பொருள் கூறலாம். முதல் அந்தணன் - முதன்மையுடைய முனி, விசுவாமித்திரன். படிவம் - வடிவம். அடல் - வலி. நச்சு - விருப்பு. உடை - உடைய; உடைய என் பதன் யகரம் கெட்டு நின்றது. நச்சு உடை - (கண்டார்) விரும்புந்

தன்மையுடைய. வடி - மாவடு. வடிக்கண் - மாவடுவை யொத்த கண்களை யுடைய. மலர் நங்கை - மலர் மகள் - இலக்குமி. 'இவள் மலர் நங்கை என்றால்' என இயைக்க.

"அச்சு என நினைத்த - (உலகத்துக்கு அச்சாணி போன்றவ னென்று மதிக்கப்பட்ட. அச்சு ஆகுபெயர்" என்றும், "இருனே (என) நினைந்தான் என்று முடிக்க." என்றும், "கண் மலர் நங்கை இவள் - கண் மலர்களையுடைய பெண் இத்தன்மையள்" என்றும் உரைகள் உள.

வசிட்டர் 'மலர் புல்லும் மங்கை யிவளாம்' என்றும், தசரதர் 'இன்று திரு எய்தியது எனக்கு' என்றும், விசுவாமித்திரர் 'மலர் நங்கை இவள்' என்றும் மூவரும் ஒருவர்போலச் சீதாதேவியை இலக்குமிதேவியாகக் கருதியதாகக் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

[வில்லை ஒடித்தவர், "இளையகோவொடும் - பராவரும் முனியொடும் பதிவந் தெய்தினன்" என்று நீலமாலை என்ற தாதி, முன்பு சொல்லக் காதாற் கேட்டு, அநுமானப் பிரமாணத்தால், தாம் காதலித்தவரோ அல்லரோ வென்ற சந்தேகம் பெரும்பாலும் நீங்கலுற்றிருந்த சீதாதேவி, பிரத்தியட்சப் பிரமாணத்தால் அச் சந்தேகம் முழுதும் நீங்குதற் பொருட்டு, அவரை அகத்தேயன்றிப் புறத்தேயும் காண விரும்பித் தம் கைவளையல்களைத் திருத்தும் பாவனை செய்து, அந்த வளையல் களைப் பார்த்தல் போல, இராமரைக் கடைக்கண்ணால் நோக்கினர்: நோக்க வே பலகோடி தேவர்கள் பங்கிட் டுண்ட அமிழ்தத்தை வேறொருவ ரோடும் பகிராமல் ஒருவர் தாமே முழுதும் உண்டாற்போல, உடம்பு பூரித்தார்.

சீதாதேவி, தம் கருத்திற் குடிகொண்ட கள்வரே வில்லை முறித்தவ ரென்று அகக் கண்ணாலன்றி முகக்கண்ணாலும் அறிந்தபோது, அஞ்ஞானம் நீங்க மெய்ஞ்ஞானம் ஓங்கப் பெற்றவர்கள் அடையும் முத்தி யின்பத்தை ஒத்த இன்பத்தை உற்றனர்.

தசரதர் விசுவாமித்திரரை நோக்கிக் "கல்யாணத்துக்கு நன்னாள் எந்நாள்?" எனக் கேட்க, அவர் "நாளைத்தினம் நல்லதினம்" என்றார்.

அப்போது எல்லாரும் எழுந்து அவரவரிருப்பிடம் அடைந்தார் கள். சூரியனும் அத்தமனமடைந்தான்.]

கடிமணப்படலம்.

கல்யாணத்தைக் கூறுவது.

[சனகரால் இனிமையாக உபசரிக்கப்பெற்றுத் தேவபோகங்கள் போன்ற போகங்களை நுகர்ந்து, தசரதர் முதலாகத் தாழ்ந்தோர் இறுதியாக வுள்ள எல்லாரும், உடம்போடு தேவ லோகத்தை அடைந்தவர்கள் போன்றார்கள்.]

206. தேடரும் நலத்த புனல் ஆசை தெற லுற்றார்,
மாடொர் தடம் உற்றதனை எய்தும் வழி காணார்,
ஈடழி வுறத் தளர்வொ டேமுறுவ ரன்றே:
ஆடக வளைக் குயிலும் அந்நிலையள் ஆனாள்.

இ - ள். நீர்வேட்கையால் வருத்தப்படலுற்றவர்கள் ஒரு தடாகத்தின் பக்கத்திலே சேர்ந்தும் அதனை அடையும் வழியைக் காணாதவர்கள் (ஆனபோது) வலியழிந்து தளர்வடைந்து ஏக்கமுற்று மயங்குவார்களன்றோ. (அவ்வாறே, இராமர் அருகே உறப்பெற்றும், அவரை அடையப்பெறாமையால்) சீதாதேவியும் அவர்கள்தன்மையின ளானார்.

தேடரும் - தேடிக்கிடையாத. நலத்த—நன்மையுடைய. புனல் - நீர். தெறல்—வருத்துதல். மாடு—பக்கம். தடம்—தடாகம். 'ஓர் தடமாடு' எனக் கூட்டுக. ஈடு—வலி (புறப்பொருள்வெண்பாமாலை). ஏமுறுதல்—ஏக்கமுற்று. மயங்குதல் (ஷை). ஆடகம்—தங்கம். வளை—வளையல். வளைக்குயில்—வளையல் அணிந்த, குயில்ஓசைபோல் இனிய மொழியுடையாளாகிய சீதை.

[சீதாதேவி, 'இராமரைக் கண்டவுடனே, அவர் அடியைச் சார்ந்து, பின்னே சென்று, அவரைவிட்டுப் பிரியாதிருந்து, அவர் திரும்ப வந்த போது கூடவந்து, மீண்டும் அவருடன் போய்விட்டது என்மனம், நெடுநாள் அவரோடிருப்பது, என்னோடு ஒருபோது தங்கலாகாதோ' என்றும், 'இரவோ விடிகின்றதில்லை, கண்ணோ துயில்கின்றதில்லை, பகலோ வருகின்றதில்லை, மயலோ அகல்கின்றதில்லை. உயிரோ ஒழிகின்றதில்லை' என்றும், 'கடலே! தரையிலே வளைகளைச் (-சங்குகளை,

வளையல்களைச்) சிந்துகின்றாய்! எழுகின்றாய்! விழுகின்றாய்! புரள்கின்றாய்! அலறுகின்றாய்! உறங்காய்! நீயும் என்னைப்போல மன்மதபாணத்துக்கு அஞ்சியகன்னிகையோ!' என்றும் பலவாறு புலம்பி இரவெல்லாம் வருந்திக்கொண்டிருந்தார்.

இராமர், 'யான் கன்னிமாடத்தே கண்டு, முடிவில்லாத காதல் கொண்டு, கண்ட கண்கள் துணையாக மனத்தின்கண்ணே சித்திரித்து வைத்துப் பின்பு சனகர் கொலுமண்டபத்திற் கண்டும் ஒரு பெண்ணின் ஆகம் எங்கும் விளங்கும் அழகை முழுதும் காணமுடியவில்லை: ஆகாயமெங்கும் பரவும் மின்னலைக் காண்போர் அதன் ஒரு பகுதியையே காண்பர்; அவர் அதனை எத்தனைமுறை காணினும் முழுதும் காண்பதெங்ஙனம்?' என்றும், 'என்மனமே! என்னை ஒருபோதும் நினையாய்! நீ என்பால் வருதற்கு வழி நீண்டதாயிருக்கின்றதோ! நீ யார்? ஏன் வந்தாய்? என்று உன்னை வினவாதவர்பால் விடைபெற்றாயில்லையோ! அவரோடு போன நீயும், அவரைப்போல, என்னை மறந்தாயோ!' என்றும், 'விடம், பாம்பின் பல்லை யிடமாகக்கொண்டிருந்தது முன்னாளிற் போலும்; இந்நாளில், அது என் கண்ணையும் கருத்தையும் கணப்பொழுதும் நீங்காதவாது கண்ணையே இடமாகக்கொண்டிருக்கிறது' என்றும் பின்னும் பலபலவும் நினைந்துகொண்டு அன்றை இரவைக் கழித்தார்.

இரவு விடியத் தன்குலத்துதித்த இராமரது திருமணங்காணவந்தான் போலச் சூரியன் தோன்றினன். அப்போது வீடுகளிற் பூமாலைகள் தொங்கவிட்டும், வாசல்களில் வாழை கமுகுகள் நட்டும், திண்ணைகளில் முளைப்பாலிகை வைத்தும், வீதிகளில் தோரணங்கள் கட்டியும், மதில்களின்மேல் ஆகாய மளாவக் கொடிகள் நட்டும், தேர்கள் யானைகள் குதிரைகளை அலங்கரித்தும், மற்றும் பலவாறும் மிதிலாநகரம் திருக்கலியாணத்துக்காகச் சிங்காரிக்கப்பட்டது.

மாதர்களும் மைந்தர்களும், சிறந்த உடைகள் உடுத்தும், உயர்ந்த அணிகள் அணிந்தும், நறிய பூமாலை புனைந்தும், பரிமள தயில சந்தன களபங்கள் பூசியும், அலங்காரம் செய்துகொண்டார்கள்.

அந்தணர் அரசர்கள் பாவாணர் யாழ்ப்பாணர்கள் பாடகர் பாடகிகள் நாடகர் நாடகிகள் நெருங்கிக்கூடினார்கள்.

திருமணங் காணவந்த தேவர்களும் தேவமாதர்களும், தேவலோகத்தி லிருக்கின்றேமோ, பூலோகத்திலிருக்கின்றேமோ, என்று திகைக்கும்படி, மிதிலாநகரம் அமராவதியை ஒத்திருந்தது. (அமராவதி-தேவேந்திர நகரம்)

இராமர் கலியாணநாள், இந்திரன் முடிசூடுநாள் போன்றது.

பொன்னாலும் மணிகளாலும் புனைந்த கல்யாணமண்டபத்துக்குத் தசரதர் தேவியருடன் வந்து ஆதனத்தில் அமர்ந்தார். முனிவரும் அரசரும் சனகரும் கிளைஞரும் அவரவர் மனைவியர் சகிதராய் வந்திருந்தார்கள்.

எல்லாரும் எல்லாப் பொருள்களும் இருக்கப்பெற்றதனால், அம் மண்டபம், பிரமாவின் அண்டத்தையும் திருமாலின் வயிற்றையும் ஒத்தது

இராமர், கடல்நீர் கங்கைநீர் முதலிய தீர்த்தங்கள் கலந்த நீராடிப் பாற்கடல் கருங்கடலைச் சூழ்ந்ததுபோல வெண்பட்டுவேட்டி கட்டிக் கருமேகத்தின்மேல் வெண்ணிலாப் பரவியது நேரச் சந்தனம் பூசிக் கருங்கடலில் வெண்மதி தோன்றுதல் நிகர மயிர்முடியில் மலர்மாலை சூடினார்.]

207. ஏதம் இல் இரு குழை இரவு நண்பகல்
காதல் கண் டுணர்ந்தன கதிரும் திங்களும்
சீதை தன் கருத்தினைச் செவியின் உள் உறத்
தூது சென் றுரைப்பன போன்று தோன்றவே.

இ-ள். குற்றமற்ற குண்டலங்கள்,—(முறையே) பகலிலும் இரவிலும் சீதாதேவியின் காதலைக் கண்டறிந்தவைகளான சூரியனும் சந்திரனும் அத்தேவியாரது கருத்தைக் காதிலே உள்ளே உறும்படி தூது சென்று சொல்வனபோன்று தோன்ற இராமர் காதுகளிற் குண்டலங்கள் பூண்டார்).

[அவர், 'நவக்கிரகங்களுள் ஒன்றாகிய சந்திரனைச் சிவன் சூடினார், நாம் மற்றெல்லாச் சுடர்களையும் ஒருசேர அணிவோம்' என்று அணிந்தாற்போல, வீரபட்டத்தை நெற்றியிலணிந்து திலகம் தீட்டினார்.

சீதாதேவியின் பல்வரிசை தம் மனத்துள் நிறைந்து மார்பில் வெளிப்பட விளங்கினாற்போல முத்துமாலை புனைந்தார்.

தன்னில் இழைக்கப்பட்ட வயிரவெண்மணிகளும் பதுமராகச்செம் மணிகளும் முறையே படப் பொறிகளும் கோபத்தினாற் சிவந்தகண்க ளும்போலத், தான் பாம்புபோல, விளங்கிய வாகுவலயத்தை மலைபோலும் தோளிலே மந்தரமலையைச் சுற்றிய வாசுகியைப் போல அணிந்தார்.

கருமேகத்திலே பலநிறங்கள்படைத்த வானவில் விளங்குதல்போலக் கரிய திருமார்பிலே பலவருண மணிமாலையை வனைந்தார்.

மார்பில் தரித்திருந்த முத்துமாலையின் வெள்ளொளி பாவியது போல, வெண் பட்டுத்தரீயம் மிலைந்தார்.

இனி உலகை அளப்ப தெப்படி யென்று தடுக்கும் தடைகள் போன்ற சிலம்புகளை அணிந்தார்.

இவ்வாறாக, இராமர், அலங்காரபூரிதராய்ச், சூரியனது தேர் போலும் தேரிலே சூரியன்போல ஏறி, அருணன்போலப் பாதர் தேர் செலுத்த, இலக்குமணனும் சத்துருக்கனும் இருபக்கமும் நின்று சாமரை யிரட்டச் சென்றார். செல்லும்போது, எல்லோரும் பூமழை பொழிந்தார்கள்; சுண்ணப்பொடி தூவினார்கள்; காசுகளும் தூசுகளும் வீசினார்கள். தூசு - வஸ்திரம்]

208. வள்ளலை நோக்கிய மகளிர், மேனியின்
எள்ளரும் பூணெலாம் இரிய நிற்கின்றார்,
உள்ளன யாவையும் உதவிப் பூண்டவும்
கொள்ளையிற் கொள்கெனக் கொடுக்கின் றாரினே.

இ-ள். உள்ளபொருள்களெல்லாவற்றையும் கொடுத்து (ப் பின்பும் கொடுக்கும் ஆசைதூண்டக் கொள்வாரைநோக்கி, இன்னும் அதிகமாகக் கொள்வீராகஎன்று(குதூகலித்துக்)கூறிக்கொடுக்குங்கொடையாளர்போல, இராமரைக்கண்ட மாதர்கள்(காம பரவசராகி மெலிவுற்றதனால் தம்)உடலி லணிந்திருந்த ஆபரணங்களெல்லாம் கழன்று நீங்க நின்றார்கள்.

எள் அரும் பூண் – பழிப்பில்லாத ஆபரணங்கள் – குற்றமற்ற ஆபரணங்கள். இரிய – நீங்க. பூண்ட – பூண்டவை – ஆபரணங்கள். கொள்ளை - மிகுதி. 'கொள்ளையில் கொள்க' என்பதற்குக் கொள்ளை யடித்தலிற்(பறிக்கப்படுபவர் பூண்டிருக்கும்பூண்களையும் கைக்கொள்ளல்) போலக் கொள்க' என்றும் பொருள் கொள்ளலாம்.

[தேரிலே செல்லும் சூரியன் மேருமலையை அடைதல்போலத் தேரிற் சென்ற இராமர் கல்யாண மண்டபத்தை அடைந்து, அங்கிருந்த முனிவரைத் தொழுது, தசரதரைப் பணிந்து, அவர் பக்கத்தில் இட்டிருந்த ஆதனத்தில் அமர்ந்தனர்.] (தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றும் ஆண்டு விழா.

சங்கத்து நிகழ்ச்சியுரைப்போர் எழுதுகிறார் :—

இச்சங்கத்தின் பதின்மூன்றும் ஆண்டுத் திருவிழா, நிகழும் - ரக்தாக்ஷி வருஷம் புரட்டாசி டு. ௬ (செப்டம்பர் 20, 21)ஆம் நாட்களில், சங்கக்கொட்டகையில், சென்னை வளர்ச்சிநெறி அமைச்சர் திரு. திவான்பகதூர், கனம் T. N. சிவஞானம்பிள்ளையவர்கள் தலைமையில் மிகுசிறப்பாக நிகழ்ந்தது. அதன் சுருக்கம் வருமாறு :—20உ சனி மாலை ஒருமணி முதலே விழாவிற்கென்றே அமைக்கப்பெற்றுப் பல்வகை அணிகளுடன் விளங்கிய கொட்டகையில், சங்கஉறுப்பினர்களும், சங்கஅன்பர்களும் ஆகிய புலவர்கள், செல்வர்கள், மாணவர்கள், அரசியல் முதன்மையர்கள், நாட்டாண்மை நகராண்மைக்கழகத்தினர்கள் முதலிய ஆயிரக்கணக்கினர் கூடி நிறைந்திருந்தனர். இரண்டுமணிக்குச் சங்க உறுப்பினர், அன்பர், மாணவத்தொண்டர் முதலிய நூற்றுக்கணக்காயினர் இன்னிசைக் கருவியும், மாணவர்கள் வாழ்த்தொலியும் இனிதொலிக்க, அவைத்தலைவரவர்களை, அவர்கள் தங்கியிருந்த பெருந்திருவர் V. A. வாண்டையாரவர்கள்மாளிகையிலிருந்து அழைத்து வந்தனர். வழிநெடுகப் பல்வகை வளைவுகளில் அமைச்சரைப்பற்றிய புகழுரைகளும், வாழ்த்துரைகளும் சிறக்க அமைந்து திகழ்ந்தன. அவைத்தலைவர் அவையை நெருங்கியபோது கடலென வாழ்த்தொலி மல்கியது. தலைவர் உயரிய இடத்து அமரவே, விழாநிகழ்ச்சி செவ்வி தின் நிகழத்தொடங்கியது. கடவுள்வாழ்த்து, தமிழ்த்தாய்வாழ்த்துகள் இனிது பாடப்பெற்றன. தெள்ளிய இனிய செந்தமிழ்ப் பாக்களால் ஆய சங்க வரவேற்பினை, சங்கத்தலைவர்க்காகச் சங்க அன்பர், திரு. இராமசாமிவன்னியர் அவர்கள் மிக இனிமையாகப்படிக்க, அதனைச் சங்கத்தலைவர் அவைத்தலைவருக்கு அளித்தனர். சங்கமாணவச்சிறுவர்களும் ஓர் இனிய வரவேற்புப் பாடி அளித்தனர். இவையிரண்டும் மற்றோர்பகுதியில் வெளிவரும். சங்கஅமைச்சர், பெத்தாச்சிவள்ளல்

திருவுருவப்படம், ஓர் இனிய செந்தமிழ்வாழ்த்து முதலிய அடங்கித் திகழும் சங்க அறிக்கையைச் சுருக்கிப் படித்துமுடித்தனர். வாவேற்புக்கள், அறிக்கைகள் எல்லாம் அவையோர்க்கு வழங்கப்பெற்றன. சங்கத்துத் தேர்ச்சி (பரீட்சை) யில் முதன்மையில்நின்ற மாணவர் இருபதின்மருக்குமேலாயவர்க்குப் பலநூல்கள் பரிசில் அளிக்கப் பெற்றன. நளவெண்பாவியாசப்பரிசாக ஓர் வெள்ளிப்பதக்கம் உரத்தநாடு போர்டு (ஐஸ்கூல்) உயர்தரப்பள்ளிக்கூடமாணவர் நவநீதம் என்பார்க்கு அளிக்கப்பெற்றது. பின்னர் அவைத்தலைவரவர்கள் மிகவும் ஆராய்ச்சியிலும் பழக்கத்திலும் கண்ட பலபொருள்களைத் தொகுத்தெழுதி வந்திருந்ததாய அரிய முன்னுரையைத் தெளிவாகப் படித்தனர். அதன் பின்னர் விரிவுரைகள் தொடங்கின. சங்கம் பள்ளிக்கூடத்தைச் சார்ந்த இருமூன்றாண்டுச் சிறுவன் பாலருவாயன், பாலருவாயர் ஆகிய ஞான சம்பந்தர் ஞானப்பாலுண்டது என்பதுபற்றி ஓர் மெல்லுரையாய விரிவுரை மிழற்றினன். அதன்பின், தமிழும் சைவமும் தழைத்தோங்கப் பலவழியாலும் முயன்றுவருபவராகிய திரு. S. சச்சிதானந்தம்பிள்ளையவர்கள் B.A., L.T., தமிழ்நாட்டின் முன்னேற்றம் என்பதுபற்றி, தமிழ்நாட்டின் முற்கால பிற்கால நிலைகளை அவையோர் எண்வகைமெய்ப்பாடுகளும் அடுத்தடுத்தடைய இனிது எடுத்துரைத்தார்கள். அதன்பின்னர், தென்னாட்டுப் பெரும்புலவர்களுள் ஒருவராய பண்டித மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள், சுந்தரர் என்னும் பொருள்பற்றி, அப்பெரியாரின் பெருமையையும் அவர்தம் தெய்வத்திருப்பாடற் பெருமையினையும் தமிழ்நூல் பலவற்றினும் துருவிஎடுத்துள்ள தமது புலமையும் அவையோர்மகிழ்வும் வெளிப்பட நன்கினிது மொழிந்தார்கள். முடிவில், அடுத்தநாள் காலை எட்டு மணிக்கு மீண்டும் அவை கூடும். பெத்தாச்சி வள்ளல் புகழ்நிலயம் (நூல்நிலயம்) திறக்கப்படுவதோடு, முடிபுகள் (தீர்மானங்கள்) சிலவும் நிகழுமென அவைத்தலைவரவர்கள்கூறத் தமிழ்த் தாய்வாழ்த்து கடவுள்வாழ்த்துக்கள் நிகழ ஆண்டுவிழாவின் முதல்நாள் இனிது நிறைவுற்றது.

இனி, விழாவின் இரண்டாநாள் ஞாயிறு (21-9-24 புரட்டாசி ரு) காலை ஐந்து நாழிகைக்கு ஒரு பெருங்கூட்டம் கூட, அன்பர் பல்லோர் வழக்கம்போல் இசைக்கருவிகள் மாணவத்தொண்டர் வாழ்த்துப்பாடல்கள் ஆய ஒலிமுழக்கத்தோடு அவைத்தலைவரவர்களையும், நூல்நிலயம்

திறந்துவைக்கும் SIR. மு. சித. முத்தையச்செட்டியாரவர்களையும் திரு. V. A. வாண்டையாரவர்கள் மாளிகையிலிருந்து அழைத்துவந்தனர். இவ்விரு தலைவர்களும் அவையோர் மகிழ்வொலியொடு அவைத்தலைமையிடத்தமர்ந்தபின், ஓர் இனிய வரவேற்புச்செய்யுளைச் சங்கத்தலைவர்க்காக திரு. இராமசாமிவன்னியாரவர்கள் இனிதுபடிக்க, அதனைச் சங்கத்தலைவர், திரு. Sir. முத்தையச்செட்டியாரவர்கள்பாற் சேர்ப்பித்தனர். உடனே எல்லோரும், பெத்தாச்சி புகழ்நிலயம் இருக்கும் இடத்திற்குச் செல்ல, அங்கே திரு. முத்தையச்செட்டியாரவர்கள் தமது அருமைத் தம்பியாரது பெரிய திருவுருவப்படத்தைக் கண்டு சிறிது கலங்கித் தெளிந்து நூல்நிலயத்தைத் திறந்தனர். அப்போது பெத்தாச்சி வள்ளலாரின் நண்பர்களில் ஒருவரும் சங்க உறுப்பினருமாகிய திரு. குருமூர்த்திப்பிள்ளையவர்கள் அவ்வள்ளலார் தம்பாற் கூறியிருந்த சில உண்மையுரைகளை அமைத்தெழுதிய பாட்டொன்றைப்படித்துத் தந்தனர். முடிவில், திருவாளர் செட்டியாரவர்கள் உருக்கமும் சங்கத்தின் அன்பும் ததும்பி வெளிப்படச் சின்மெல்லுரைகள் கூறினார்கள். பின்னர் விழா நிகழும் கொட்டகைக்கு யாவரும் வந்தமர்ந்தனர். இவ்வளவில் பின்னர்க் குறிக்கும் சில முடிபுகள் நிறைவேறிய பின் அவைத்தலைவரவர்களும், செட்டியாரவர்களும் வேறுசில அலுவல்கள் குறித்து வெளியே ஏகிவர நேரிட, அவைத்தலைவரவர்கள், தென்னாட்டு இருமொழிப் பெரும்புலவராகிய மு. கதிரேசச்செட்டியாரவர்களைத் தலைமைதாங்கி விழாவை நடாத்தச்செய்து, திரு. முத்தையச்செட்டியாரவர்களுடன் விடைகொண்டனர். அதன்பின் சங்கத்து மற்றோர்மாணவன் 'குமணன்' வரலாற்றினை உருக்கந்தோன்ற எடுத்துரைத்தனன். இப்பால், பண்டிதர். தண்டாயுதபாணிக்காடவாராயரவர்கள் உயிர்வருக்கமாலையென்னும் ஓர் செய்யுள் நூலைப் பாடிமுடித்தனர். அதன்பின் சங்கநூல்நிலயப் பார்வையாளர், பண்டிதர் சா. சிதம்பரஉடையாரவர்கள் தமிழ்வளர்ச்சி என்பது பற்றிச் சிறியஉரை ஒன்று நிகழ்த்தினர். திருவாளர் கதிரேசச்செட்டியாரவர்கள் முன்னுரையாலும் இடையுரைகளாலும், முடிவுரையாலும் பல அரிய பொருள்கள்வெளிப்பட இனிதுகூறி, அவையை மகிழ்ச்சிக்கடலில்நின்று இன்பமிழ்துண்ணச்செய்தனர். இக்காலையில் முடிந்தமுடிபுகள், 1. அரசநன்றியறிவித்தல், 2. பெத்தாச்சிவள்ளலார் காலஞ்சென்றமைக்கு அவையோர் எய்திய துயரினை அன்னார்சுற்றத்தார்க்கறிவித்தல்; 3. சங்கத்தே,

சென்றஆண்டுகளிற்செய்துள்ளமுடிபுகள் பயன்பெறுமாறு தமிழ்நாட்டுச் சில்லாக்கள்தோறும் தக்காரைக் குறித்து ஓர் கழகம் நாட்டி வேலை செய்யத் தொடங்கல்; 4. சித்தர்மருத்துவத்தினை ஆயுர்வேத முதலிய வற்றினும் முதன்மையளித்துப் புரக்கவேண்டுமென அரசியலார் முதலி யோரை வேண்டுவதோடு, சித்தர்வைத்தியமுறையினைப் போற்றிவரும் பெரியோர்க்கு நன்றியறிவித்தல்; 5. தமிழிற் சிறந்த பாடநூல்களை எழுதுவோர்க்குப் பொருளுதவிசெய்ய, நாட்டாண்மை, நகராண்மை, அர சியற் கழகங்களைவேண்டல் என்பனவாம். பின்னர், வழக்கம்போல் தமிழ்த்தாய்வாழ்த்து, கடவுள்வாழ்த்துக்களோடு காலைவிழா இனிது நிறைவுற்றது.

பிற்பகல் 2-மணிக்குப் பெருங்கூட்டம் கூடியது. அவைத் தலைவ ரவர்கள் விழாவிடம் எய்தி மகிழ்ச்சியொலி ஆர்ப்ப, உயர் இடத்தமர்ந் தனர். கடவுள்வாழ்த்து, தமிழ்த்தெய்வவாழ்த்துக்கள் இனிது நிகழ்ந்தன. சங்கம் நிறுவிய துங்கன் ஆகிய திரு. இராதாகிருட்டினனார் சேய் மெய்ப்பொருள்நாயனார்வரலாற்றை எடுத்தியம்பியது வியக்கத் தக்கதாகவிருந்தது. சங்க மாணவனாகிய தங்கவேலு என்னும் இன் னிசைவல்லான், குலசேகராழ்வார்வரலாற்றினை, இடையிடையே இன் னிசைப் பாடல்கள் விரவ எடுத்தியம்பியது யாவரும் மெச்சத்தக்கதா யிருந்தது. கோனார்பட்டிலிருந்து வந்திருந்த (இளைஞராகிய) பி. மு: பி. சுப்பிரமணியஞ் செட்டியார் என்பார், அறம் என்னும் ஓர் அரிய விரிவுரைசெய்தனர். இப்பால் திருச்சிராப்பள்ளி, P. T. ஸ்ரீநி வாச ஐயங்கார் அவர்கள் (M.A., L.T.,), தமிழகமும் நாட்டுவரலாறும் என்பதுபற்றித் தமிழ்நாட்டின் தொன்மை உயர்வை, வரலாற்று ஆராய்ச்சி வழியான், எடுத்தியம்பி அவையை மகிழ்வித்தார்கள். பின் னர், திருநெல்வேலி, R. P. சேதுப்பிள்ளையவர்கள் தேனொழுக்கென இயன்ற செந்தமிழ்நடையில், சிலப்பதிகாரக்கதைநிகழ்ச்சியை இடை யிடையே செய்யுணயங்காட்டி அரிய விரிவுரையொன் றியற்றினார்கள். அதன்பின்னர் இருமொழிப்புலவராய கதிரேசச்செட்டியார் அவர்கள், ஆளுடையபிள்ளையார் என்பதுபற்றித் தமிழுலகம் யாங்கணும் அறிந் துள்ள தமது விரிவுரைச்சிறப்பு வெளிப்பட ஓர் அமிழ்தமழைபன்ன விரிவுரை நிகழ்த்தினர். முடிவில், அவைத்தலைவரவர்கள் விழாநாட்களில் நிகழ்ந்த விரிவுரைகளின் சிறப்பினை உரியவாறு பாராட்டித் தமது

தமிழ்த்தாய் அன்புபற்றித் தாம் செயத்தகும் கடமைகளையெல்லாம் செய்வதாக்கூறியதோடு, தமிழின் மேம்பாடுகுறித்து ஒவ்வொருவரும் தம்தம்கடமையை ஆற்றிவரவேண்டித் திருவருளைச் சிந்தித்து அமர்ந்தனர். பின்னர், சங்க அமைச்சர், அவைத்தலைவர்கள் விரிவுரையாளர்கள் இன்னிசைப்பாடல்வல்லார்கள் விழாநிகழ்ச்சிக்கு உரிய உதவியாளர்கள் அவையோர் முதலியோர்க்குச் சங்கநன்றியையும் வாழ்த்தையும் இனிது எடுத்துக்கூறி, மாலைசூட்டல், பூங்கொத்து அடகு கொடுத்தல் முதலியவற்றினோடும், தமிழ்த்தாய்வாழ்த்து, கடவுள்வாழ்த்துக்களோடும் விழா இனிது நிறைவுற்றது. நலம்.

கரந்தைத்தமிழ்ச்சங்கத்துப்
பதின்மூன்றும் ஆண்டுத் திருவிழாவில் தலைமைதாங்கிய
சென்னைமாகாண வளர்ச்சிநெறிஅமைச்சர் திருவாளர், திவான்பகதூர் கனம், T. N. சிவஞானம்பிள்ளை, B A., M.L.C., அவர்களுக்கு
ஷை சங்கத்தார் கூறிய நல்வரவு.

பொன்மேவு நெல்வேலி புரிதவத்தின் பயனாய்
மண்மீது தமிழன்னையார் மாண்புறுநன் மகனாய்
எந்நாளு முயர்சைவத் திருந்துறையின் எழிலாய்
கண்ணாகுங் கலைத்துறைசேர் சிவஞானக் கன்றே!
கவினியஇவ் வவைவருக! சிவஞானக் களிறே! (க)

பொறையாலும் நிறையாலும் பொங்கரவை யணிந்த
இறையாவான் திருவடியை பெத்திபுளம் போற்றும்
முறையாலும் நினைநேர்வர் முழுதுலகும் இலாக்
குறையாமை வளர்செல்வச் சிவஞானக் குன்றே!
குலவியஇவ் வவைவருக! சிவஞானக் கோவே! (உ)

அரசாள்வர் நெறிதன்னை அன்னவரோ டுலகோர்
பரவுறுமா உளபடிகள் பற்பலவும் ஏறித்
தெருளுறுதி வான்பகதூர் செப்புகன மாண்பும்
பெறலருஞ்சீர் பிறவுங்கொள் சிவஞானப் பேராய்!
பெறுபுகழிவ் வவைவருக! சிவஞானப் பேறே! (ங)

வேறு.

மன்னன் செங்கோ லதுவோச்சும் மாண்பார் அவையின் அமைச்சாய
தன்னே ரில்லாப் பேறுற்றும் தாயைச் சான்றோர் மறவாரே;
தன்னே ரில்லாப் பேறுற்றும் தாயைச் சான்றோர் மறவாமை
அண்ணல்! எங்கள் சிவஞான அன்பே! நின்பால் அறிந்தாமே! (ச)

ஓங்கும் சான்றோர் அரசவையோர் போற்றும் அமைச்சாம் பேறுற்றுத்
தங்கும் வேலை யான்முதிர்ந்தும் தாயைப் போற்றற் கிளையாரே;
தங்கும் வேலை யான்முதிர்ந்தும் தாயைப் போற்றற் கிளையாமை
எங்கள் தலைவ! சிவஞான எந்தால்! நின்பால் ஓர்ந்தாமே! (ரு)

மங்காச் சீர்த்திச் சான்றோர்கள் மாணும் ஆட்சி நிலைதன்னால்
தங்கள் தொண்டர் பலரேனும் தாமே தாய்த்தொண் டியற்றுவரே;
தங்கள் தொண்டர் பலரேனும் தாமே தாய்த்தொண் டியற்றுவது
துங்கன் எங்கள் சிவஞானத் தோன்றல்! நின்பாற் றோன்றுவதே! (சு)

வளமலியும் பொருணிலையில் மாணுமை மயங்கிடினும்
உளநிறையன் பார்மிகுவ தொருகரந்தை யுறுசங்கம்;
உறுசங்கம் இதுவென்றே உற்றனையிவ் வோங்கவையம்
வருமெங்கள் சிவஞான வள்ளால்! நீ வாழிடவே! (எ)

புலமையினர் சிலரேனும் பொருளர்பலர் இலரேனும்
வளமையெனும் உளமுடையார் வாய்கரந்தை வளர்சங்கம்;
வளர்சங்கம் இதுவென்றே வந்தனையிம் மாவவையம்
உளமகிழெம் சிவஞான உயர்வோய்! நீ வாழியவே! (அ)

வருதேவர் பலராக, மலிபுகழார் தமிழ்த்தேவெம்
ஒருதேவென் பார்மலியும் ஓர்கரந்தை ஒளிர்சங்கம்;
ஒளிர்சங்கம் இதுவென்றே ஓர்ந்தவையம் நேர்ந்தனையால்
எழிலன்பிற் சிவஞான எந்தால்! நீ வாழியவே! (கூ)

ஷை சங்கத்து மாணவர் கூறிய வாழ்த்துப்பா.

மன்னுநெல் வேலிசெய் யுந்தவன்—ஒரு
மாணுருக் கொண்டுபி றந்தவன்—அந்தத்
தன்னிக ரில்லா உமைபங்க ஞர்திருத்
தாளிணைக் கன்புமி குந்தவன்

மாசில்வே ளாண்குல மேயினன்—சென்னை
மாகாண மந்திரி யாயினன்—இந்தக்
காசினி தன்னிலே வாழ்பவர்க் கென்றும்
கருணை புரிந்திடுந் தாயனன்

சீர்கொள் சிவஞானப் பேரினன்—செம்மை
சேர்புகழ் மல்கிய ஏரினன்—மிகும்
பேர்கொள்தி வான்பக தூர்ப்பட்ட மேவிப்
பெருமைகொ ளும்மலர்த் தாரினன்

எங்கரந் தைத்தமிழ்ச் சங்கமே—தலை
யேற்றத மிழ்க்கலைச் சிங்கமே—இவன்
மங்கள மோங்கிப்பல் லாண்டுகள் வாழ்கஇம்
மாநிலத் தில்மிகத் துங்கமே!

605. வரைபொரு நீண்மார்பின் வட்கார் வணக்கும்
நிரைபொரு வேன்மாந்தைக் கோவே—நிரைவளையார்
தங்கோலம் வவ்வுத லாமோ வ்வர்தாய்மார்
செங்கோல னல்ல னென.

606. வாமான்றேர்க் கோதையை மான்றேர்மேற் கண்டவர்
மாமையே யன்றோ விழப்பது—மாமையிற்
பன்னூறு கோடி பழுதோவென் மேனியிற்
பொன்னூறி யன்ன பசப்பு.

607. நீரு நிழலும்போ னீண்ட வருளுடைய
ஊரிரே யென்னை யுயத்கொண்மின்—போரிற்
புகலுங் களிவானைப் பூழியர்கோக் கோதைக்
கழலுமென் னெஞ்சங் கிடந்து.

608. கடற்ருனைக் கோதையைக் காண்கொடாள் வீணி
லடைத்தா டணிக்கதவ மன்னை—யடைக்குமேல்
ஆயிழையா யென்னை யவன்மே லெடுத்துரைப்பார்
வாயு மடைக்குமோ தான்.

609. புன்னாகச் சோலை புனற்றெங்கு சூழ்மாந்தை
நன்னாக நின்றலரு நன்னாடன்—என்னாகங்
கங்கு லொருநாட் கனவினுட் டைவந்தான்
என்கொ லிவரறிந்த வாறு.

610. ஆய்மணிப் பைம்பூ ணலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தே—ணாணிப்
பெருஞ்செல்வ ரில்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் னெஞ்சு.

611. கடும்பனித் திங்கட்டன் கைபோர்வை யாக
நெடுங்கடை நின்றதுகொ ரேழி—நெடுஞ்சினவேல்
ஆய்மணிப் பைம்பூ ணலங்குதார்க் கோதையைக்
காணிய சென்றவென் னெஞ்சு.

612. வருக குடநாடன் வஞ்சிக்கோ மானென்
றருகல ரெல்லா மறிய—ஒருகலாம்
உண்டா யிருக்கவவ் வொண்டொடியாண் மற்றவனைக்
கண்டா ளொழிந்தாள் கலாம்.

(605—612) முத்தொள்ளாயிரம்.

613. இவனென் னலங்கவர்ந்த கள்வ னிவனெனது
நெஞ்ச நிறையழித்த கள்வனென்—றஞ்சொலாய்
செல்லு நெறியெல்லாஞ் சேரலர்கோக் கோதைக்குச்
சொல்லும் பழியோ பெரிது.

614. காராட் டுதிரந்தூஉ யன்ன களனிழைத்து
நீராட்டி நீங்கென்று னீங்குமோ—போராட்டி
வென்று களங்கொண்ட வெஞ்சினவேற் கோதைக்கென்
னெஞ்சங் களங்கொண்ட நோய்.

615. மல்லனீர் மாந்தையார் மாக்கடுங்கோக் காயினும்
சொல்லவே வேண்டு நமகுறை—நல்ல
திலகங் கிடந்த திருநுதலா யஃதரில்
உலகங் கிடந்த வியல்பு.

616. மாலை யருளாது வஞ்சியான் வஞ்சியான்
மேலை யமரார் கடைவேலை—வேலை
வளையார் திரைமேல் வருமன்ன மன்ன
இளையா ளிவளை வளை.

சோழன்.

617. அன்னா யறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
ஒன்னா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னான் றுறந்து விடல்;
ஏடீ யறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
வீடான் றுறந்து விடல்;
பாவா யறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் றுறந்து விடல்.

618. திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதா மேதம்—உறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் றமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.

619. நீணீலத் தார்வளவ னின்மேலா னாகவும்
நாணின்மை யின்றி நடத்தியால்—நீணீலங்

(613—615) முத்தொள்ளாயிரம். (616) தண்டி 93 மேற். (617) யாப். வி. 66; வீரசோ. யாப். 15 மேற். (618, 619) முத்தொள்ளாயிரம்.

கண்டன்ன கொண்டல் வருங்கா விரிநாட்டுப்
பெண்டன்மை யில்லை பிடி.

620. சுடரிலைவேற் சோழன்றன் பாடல மேறிப்
படர்தந்தான் பைந்தொடியார் காணத்—தொடர்புடைய
நீல வலையிற் கயல்போற் பிறழுமே
சாலேக வாயிறோறுங் கண்.

621. கண்டன வுண்கண் கலந்தன நன்னெஞ்சந்
தண்டப் படுவ தடமென்றோள்—கண்டா
யுலாஅ மறுகி னுறையூர் வளவற்
கெலாஅ முறைகிடந்த வாறு.

622. என்னெஞ்சி நாணு நலனு மிவையெல்லாம்
மன்னன் புனனாடன் வவ்வினான்—என்னே
அரவக லல்குலா யாறிலொன் றன்றோ
புரவலர் கொள்ளும் பொருள்.

623. கனவினுட் காண்கொடா கண்ணுங் கலந்த
நனவினுண் முன்விலக்கு நாணும்—இனவங்கம்
பொங்கோதம் போழும் புகாஅர்ப் பெருமானார்
செங்கோல் வடுப்படுப்பச் சென்று.

624. தானைகொண் டோடுவ தாயிற்றன் செங்கோன்மை
சேனை யறியக் கிளவேனோ—யானை
பிடிவீசும் வண்டடக்கைப் பெய்தண்டார்க் கிள்ளி
நெடுவீதி நேர்பட்ட போது.

625. தெண்ணீர் நறுமலர்த்தார்ச் சென்னி யிளவளவன்
மண்ணகங் காவலனே யென்பரால்—மண்ணகங்
காவலனே யானக்காற் காவானோ மாலைவாய்க்
கோவலர்வாய் வைத்த குழல்.

626. அறைபறை யானை யலங்குதார்க் கிள்ளி
முறைசெயு மென்பாராற் றோழீ—பிறையிறந்த
அங்கோ லணிவளையே சொல்லாதோ மற்றவன்
செங்கோன்மை செந்நின்ற வாறு.

627. அன்னையுங் கோல்கொண் டலைக்கு மயலாரும்
என்னை யழியுஞ்சொற் சொல்லுவர்—நுண்ணிலைய

(620—622) முத்தொள்ளாயிரம். (623) ஷை; தொல். பொரு. 472 மேற். (624—627) முத்தொள்ளாயிரம்.

தெங்குண்ட தேரை படுவழிப் பட்டேன்யான்
றிண்டேர் வளவன் றிறத்து.

628. புலவி புறக்கொடுப்பன் புல்லீடின் ணிற்பன்
கலவி களிமயங்கிக் காணேன்—நிலவியசீர்
மண்ணாளுஞ் செங்கோல் வளவனை யானிதன்றே
கண்ணாரக் கண்டறியா வாறு.

629. செங்கால் மடநாராய் தென்னுறந்தை சேறியேல்
நின்கால்மேல் வைப்பனென் கையிரண்டும்—நன்பாற்
கரையுரிஞ்சி மீன்பிறழுங் காவிரிநீர் நாடற்
குரையாயோ யானுற்ற நோய்.

630. குதலைப் பருவத்தே கோழிக்கோ மானை
வதுவை பெறுகென்று ளன்னை—யதுபோய்
விளைந்தவா வின்று வியன்கானல் வெண்டேர்
துளங்குநீர் மாமருட்டி யற்று.

631. அலங்குதார்ச் செம்பிய னுடெழிற்றோ ணோக்கி
விலங்கியான் வேண்டா வெனினும்—நலந்தொலைந்து
பீர்மேற் கொளலுற்ற பேதையர்க் கென்வாய்ச்சொல்
நீர்மே லெழுந்த நெருப்பு.

632. ஊட லெனவொன்று தோன்றி யலருறாஉங்
கூட லிழந்தேன் கொடியன்னாய்—நீடெங்கின்
பாளையிற் றேன்றொடுக்கும் பாய்புன னீர்நாட்டுக்
காளையைக் கண்படையுட் பெற்று.

633. நாணொருபால் வாங்க நலனொருபா லுண்ணெகிழ்ப்பக்
காமருதோட் கிள்ளிக்கென் கண்கவற்ற—யாமத்
திருதலைக் கொள்ளியி னுள்ளெறும்பே போலத்
திரிதரும் பேருமென் னெஞ்சு.

634. வரக்கண்டு நாணாதே வல்லையா னெஞ்சே
மரக்கண்ணோ மண்ணாள்வார் கண்ணென்—றிரக்கண்டாய்
வாளுழுவை வெல்கொடியான் வண்புனனீர் நாடற்கென்
தோளுழுவந் தோன்றத் தொழுது.

635. பேயோ பெருந்தண் பனிவாடாய் பெண்பிறந்தா
ரேயோ வுனக்கிங் கிறைக்குடிகள்—நீயோ
களிபடுமால் யானைக் கடுமான்றேர்க் கிள்ளி
யளியிடை யற்றம்பார்ப் பாய்.

(628—635) முத்தொள்ளாயிரம்.

636. நாம நெடுவேல் நலங்கிள்ளி சோணாட்டுத்
தாமரையு நீலமுந் தைவந்—தியாமத்து
வண்டொன்று வந்தது வாரல் பனிவாடாய்
பண்டன்று பட்டினங் காப்பு.

637. சரியும் புனைசங்குந் தண்டளிர்போன் மேனி
வரியுந் தனதடஞ்சூழ் வம்புந்—திருமான
ஆரந் தழுவு தடந்தோ ளகளங்கன்
கோரந் தொழுத கொடிக்கு.

638. நறவேந்து கோதை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியா னல்லன்—துறையின்
விலங்காமை நின்று வியன்றமிழ்நா டைந்தின்
குலங்காவல் கொண்டொழுகுங் கோ.

639. இகன்மதமால் யானை யனபாய னெங்கோன்
முகமதியின் மூர னிலவால்—நகமலர்வ
செங்கயற்க ணல்லார் திருமருவு வாள்வதன
பங்கயங்கள் சாலப் பல.

640. கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்
மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று—சொல்லுவாரற்
பொங்கும் படைபரப்பி மீதெழுந்த பூந்துகள்போர்த்
தெங்கண் கலுழ்ந்தனவா லென்று.

641. நறைகமழ்தார் வேட்டார் நலனணியு நாணும்
நிறையு [1]நிலைதளரா நீர்மை—யறநெறிசூழ்
செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர்
வெங்கோப மால்யானை வேந்து.

642. மானவா மானவா நோக்கின் மதுகரஞ்சூழ்
கானவாங் கூந்தலெங் காரிகைக்குத்—தேனே
பொழியாரந் தார்மேலு நின்புயத்து மேலுங்
கழியா கழியா தரவு.

643. முற்பற்றி னாரை முறைசெயிற் றானென்னைக்
கைப்பற்றக் கண்டேன் கனவினுள்—இப்பெற்றி

---

(636) முத்தொள்ளாயிரம். (637) தண்டி. 38; (638) ஷை. 74; வீரசோ. அலங். 29 மேற். (639) ஷை. 62; வீரசோ. அலங். 26. (640) ஷை; ஷை. 27. (641) வீரசோ. அலங். 29; தண்டி. 73. [1]நிறைதளரு. (642) தண்டி. 93. (643) தொல். புறத். 86.

தன்னைத் தனக்கே முறைப்படி னென்செய்யும்
பொன்னம் புனனாட்டார் கோ.

644. அங்க மிலாத வனங்கன் [1]நலம்புரியும்
வெங்கணையுங் காக்குங்கொல் வேல்வேந்தர்—தங்கோன்
நிலையார்த் தொடையதுல னேரிழைக்காய் முன்னோர்
மலையாற் கடல்கடந்தான் மால்.

(கூத்தன்மாணுக்கனும் அம்பிகாபதியும் பாடியது.)

645. மாவுறங்கின புள்ளுறங்கின வண்டுறங்கின தண்டலைக்
காவுறங்கின வின்னமென்மகள் கண்ணுறங்கிலள் கையணைக்
கோவுறங்கு கடைத்தலைக்குல தீபவள்ளை குதட்டமின்
ருவுறங்கு புகாரசஞ்சல வஞ்சலென்ன வடுக்குமே.

(அம்பிகாபதி பாடியது.)

646. ஏகா வடமென் னிருகொங் கையின்மேல்
ஆகா வடமா னதறிந் திலையே
த்யாகா பரணு திசையா னைகளின்
பாகா பராசு பயங்கரனே.

(கூத்தர்பாடியது.)

647. வெள்ளத் தடங்காச் சினவாளை வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்துமழைத் துளியோ டிறங்குஞ் சோணாடா
கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா வண்டர் கோபாலா
பிள்ளை மதிகண் டென்பேதை பெரிய மதியு மிழந்தாளே.

(புகழேந்திபாடியது.)

648. பங்கப் பழனத் துழுமுழவர் பலவின் கனியைப் பறித்ததெனச்
சங்கிட் டெறியக் குரங்கிளநீர் தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா
கொங்கைக் கமரா பதியளித்த கோவே ராச குலதிலகா [லே.
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கு மெலிந்தப் பிறைக்கும் விழிவே

649. என்று பெறுவேன்யா னீசன் திருமுடிமேற்
சென்று விளையாடுந் தீபமே—என்றுஞ்
செருப்புக்குத் தோல்வாங்குஞ் சென்னியக ளங்கன்
பொருப்புக்குத் தோலாப் புயம்.

பாண்டியன்.

650. பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்ரு ரிருவ ரவருள்ளும்

---

(644) தண்டி. 102. இலக். வி. 695. [1]னமீர்புரியும். (645, 646) தமிழ்நா. 132, 133. (647-649) தனிப்பா. (650) தொல். பொரு. 471; யாப். வி. 62.

பொன்னோடை நன்றென்றா னல்லனே பொன்னோடைக்
கியானைநன் றென்றாளு மந்நிலையள் யானை
யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்.

651. வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனும்
கொடிபடு வரைமாடக் கூடலார் கோமானே;
எனவாங்கு—
துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் [1]துறப்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரே.
அதனால்—
செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றுங்கொலிஃ தெண்ணிய வாறே.

652. வார்பணிய தாமத்தால் வளைக்கையோர் வண்டோச்ச
ஊர்பணிய மதியம்போ னெடுங்குடைக்கீ ழுலாப்போந்தான்
கூர்பணிய வேற்றானைக் கொற்கையார் கோமானே.
அவற்கண்டு,
பூமலர் நறுங்கோதை புலம்பலைப்ப நறுங்கொண்டைத்
தூமலர்க்கண் மடவார்க்குத் தொல்பகையே யன்றியுங்
காவலர்க்குப் பெரியதோர் கடனாகிக் கிடவாதே.

653. செய்யா ரெனினுந் தமர்செய்வ ரென்னுஞ்சொல்
மெய்யாதல் கண்டேன் விளங்கிழாய்—கையார்
வரிவளை நின்றன வையையார் கோமான்
புரிவளை போந்தியம்பக் கேட்டு.

654. எலாஅ மடப்பிடியே யெங்கூடற் கோமான்
புலாஅ னெடுநல்வேன் மாறன்—உலாஅங்காற்
பைய நடக்கவுந் தேற்றாயா னின்பெண்மை
யையப் படுவ துடைத்து.

655. போரகத்துப் பாயுமா பாயா துபாயமா
வூரகத்து மெல்ல நடவாயோ—கூர்வேன்
மதிவெங் களியானை மாறன்றன் மார்பங்
கதவங்கொண் டியாமுந் தொழ.

(651) யாப். வி. 86; வீரசோ. யாப். 12. இலக். வி. 735; [1]தொலைப் புண்டாங். (652) யாப். வி. 86. (653—655) முத்தொள்ளாயிரம்.

656. ஆடுகோ சூடுகோ வைதாக் கலந்துகொண்
டேடுகோ டாக வெழுதுகோ—நீடு
புனவட்டப் பூந்தெரியற் பெர்ற்றேர் வழுதி
கனவட்டங் கால்குடைந்த நீறு.

657. குடத்து விளக்கேபோற் கொம்பன்னார் காமம்
புறப்படா பூந்தார் வழுதி—புறப்படின்
ஆபுகு மாலை யணிமலையிற் றீயேபோல்
நாடறி கவ்வை தரும்.

658. வழுவிலெம் வீதியுண் மாறன் வருங்காற்
றொழுதேனைத் தோணலமுங் கொண்டான்—இமிழ்திரைச்
கார்க்கடற் கொற்கையார் காவலனுந் தானேயால்
யார்க்கிடுகோ பூச லினி.

659. மன்னுயிர் காவல் தனதான வவ்வுயிருள்
என்னுயிரு மெண்ணப் படுமாயின்—என்னுயிர்க்கே
சீரொழுகு செங்கோற் செழியற்கே தக்கதோ
நீரொழுகப் பாலொழுகா வாறு.

660. தானேற் றனிக்குடைக் காவலனுற் காப்பதுவும்
வானேற்ற வையக மெல்லாமால்—யானே
எளியனேர் பெண்பாலே னீர்ந்தண்டார் மாறன்
அளியானே லன்றென்பா ரார்.

661. களியானைத் தென்னன் கனவில்வந் தென்னை
யளியா னளிப்பானே போன்றான்—தெளியாதே
செங்காந்தண் மெல்விரலாற் சேக்கை தடவந்தேன்
என்காண்பே னென்னலால் யான்.

662. கார்நறு நீலங் கடியகத்து வைகலும்
நீர்நிலை நின்ற [1]தவங்கொலோ—கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியாற்
கொண்டிருக்கப் பெற்ற குணம்.

663. அறிவாரார்.........பெண்டிரே மாகச்
செறிவார் தலைமே னடந்து—மறிதிரை
மாடமுரிஞ்சு மதுரையார் கோமானைக்
கூட வொருநாள் பெற.

(656-661) முத்தொள்ளாயிரம். (662) ஷை; யாப். வி. 512 [1]பயன் கொல்லோ. (663) முத்தொள்ளாயிரம்.